# இயல் இரண்டு

# சென்னையில் உள்ள தேவாரத் திருமுறைக் கோயில்கள்

இயல் - இரண்டு

# சென்னையில் உள்ள தேவாரத் திருமுறைக் கோயில்கள்

சைவ சமய அடியார்களுள் சிறப்பிடம் பெறவர்கள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர். முதல் மூவரும் தலங்கள் தோறும் சென்று பாடிய பாடல்கள் தேவாரம் என்றழைக்கப்படுகிறது. பன்னிரு சைவத்திருமுறைகளுள் 1, 2, 3 திருமுறைகளை இயற்றியவர் திருஞானசம்பந்தர். 4, 5, 6 திருமுறைகளை இயற்றியவர் திருநாவுக்கரசர், ஏழாம் தேவாரத் திருமுறையை இயற்றியவர் சுந்தரர். எட்டாம் திருமுறையாக வைத்து எண்ணப்படும் திருவாசகமும், திருக்கோவையாரும் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்டன. இந்நால்வரையும் சைவ சமயத்தார், சமய குரவர்கள் என்ற பெயரிட்டு அழைத்தனர்.

இந்நால்வரும் திருக்கோயில்கள் இடம்பெற்ற தலங்களுக்குச் சென்று அந்தந்தத் தலத்திலுள்ள இறைவனைப் போற்றிப் பாடினர். அவ்வகையில் சென்னை மாவட்ட அளவில் தேவாரத் திருப்பதிகங்களால் பாடப்பெற்ற தலங்கள் ஆறாகும்.

சமய குரவர்கள் வாழ்ந்த கால அளவில் காஞ்சிபுரமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் தொண்டை நாடெனச் சிறப்பிக்கப் பெற்றன. தேவாரம் பாடிய நாயன்மார்களால் பாடல் பெற்ற திருத்தலங்களைப் பாடல் பெற்ற திருத்தலம் என்றும் பாடலில் பெயரளவில் குறிக்கப்பெற்ற தலங்களை வைப்புத்தலங்கள் என்றும் பாகுபடுத்தலாம்.

தேவாரப் பதிகங்களால் பாடல் பெற்ற தலங்களின் எண்ணிக்கை 274. அவற்றுள் தொண்டை நாட்டில் உள்ள திருத்தலங்கள் 32. சென்னை மாவட்டம் என்ற அளவில் தேவாரப் பாடல்கள் பெற்ற திருத்தலங்கள் ஆறு, அவை,

1. திருமயிலாப்பூர்
2. திருவொற்றியூர்
3. திருவான்மியூர்
4. திருவலிதாயம்
5. திருமுல்லைவாயில் (வட)
6. திருவேற்காடு

## தொண்டை மண்டலம்

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், தென்னாற் காட்டில் சில பகுதிகள் ஆந்திர அளவில் சித்தூர், சந்திரகிரி, நகரி ஆகிய நகர்களை உள்ளிட்ட நிலப்பகுதிகள் தொண்டை மண்டலம் எனப் பெயர் பெற்றன.

சென்னை நகரில் அமைந்துள்ள சைவத் திருத்தலங்களின் பழமையும் சிறப்பும் வரலாற்றுப்பெருமையும் மிக்க திருக்கோயில்களை ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும். பாடல் பெற்ற திருத்தலங்கள் பற்றிய தல வரலாறுகள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் இவற்றின் துணையோடு நேரில் சென்று கள ஆய்வு நிகழ்த்திக் கண்டறிந்தவற்றையும் பேட்டி மூலம் தெரிந்து கொண்ட சான்றுகளையும் மையப்படுத்தி இவ்வியல் அமைகின்றது.

## 1. திருமயிலை

தமிழகத்தில் கடற்கரையோரமாக உள்ள ஊர்களில் பழமையும், பெருமையும் வாய்ந்த ஊர் மயிலாப்பூராகும். வடக்கே திருவொற்றியூரும்

தெற்கே திருவான்மியூரும் அணி செய்ய சென்னை மாநகரின் நடுநாயகமாகத் திருமயிலை விளங்குகிறது.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிய பிறகு அதனோடு சேர்த்து பெரிய நகரமாகத் திருமயிலை உருவாயிற்று.[1] பழங்காலத்தில் புகழ் பெற்ற துறைமுகமாகவும் திருமயிலை விளங்கியது.[2]

## திருமயிலையின் பெயர்கள்

கி.பி.119–161 காலப்பகுதியில் வாழ்ந்த மேல் நாட்டுப் புவியியல் அறிஞர் தாலமி, தம்முடைய புவியியல் நூலில் ''மலியார்பா'' (Maleiarpha)[3] என்று குறிப்பிடுவது திருமயிலையைக் குறிக்கும் என்பர் வரலாற்றறிஞர்.[4] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமயிலையாழ்வார் ''மாமயிலை'' என்னும் பெயரால் திருமயிலையைக் குறிப்பிடுகின்றார்.[5] கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இவ்வூர் 'மயிலாப்பில்'[6], 'மயிலாப்பு'[7] என்னும் பெயர்களால் வழங்கப்பட்டது என்பதை அப்பர் திருவாக்கால் அறியலாம். இக்காலத்திலேயே மயிலை எனவும் அழைக்கப்பட்டது என்பதைச் சம்பந்தர் பாடிய பூம்பாவைப் பதிகம் உணர்த்துகிறது.[8] கி.பி.எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார், 'மயிலை', 'மாமயிலை'[9] என்றும் சுந்தரர் 'தொன்மயிலை'[10] என்றும் குறிப்பிடுகின்றனர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் 'மயிலை'[11] 'மயிலாபுரி' [12] என்னும் பெயர்களால் இவ்வூர் அழைக்கப்பட்டதை நந்திக் கலம்பகம் உணர்த்துகிறது.

இக்காலத்தில் 'மயிலாப்பில்' எனவும் இவ்வூர் அழைக்கப்பட்டதைப் பல்லவப் பரம்பரையின் இறுதிக் காலத்தில் வாழ்ந்த கம்ப வர்மன் காலத்துக் கல்வெட்டு உணர்த்துகின்றது.[13] கி.பி.பதினோராம் நூற்றாண்டில் 'மயிலை'

என அழைக்கப்பட்டது என்பது திருத்தொண்டர் திருவந்தாதியால் அறியப்படுகிறது.[14]

## திருமயிலைக்கு வழங்கும் வேறு பெயர்கள்

திருமயிலைக்குப் புன்னைவனம்[15], வேதநகர்[16], சுக்கிரபுரி[17], பிரமபுரம்[18], கந்தபுரி[19], கபாலீச்சரம்[20], கபாலி மாநகர்[21] என்னும் வேறு பெயர்களுமுண்டு. தமிழ்நாட்டுச் சமணர்கள் இவ்வூரைப் பத்தநாதபம் வாமநாதபுரம் எனும் பெயர்களால் அழைத்தார்கள்.[22] போர்த்துக்கீசியர் வருகைக்குப் பிறகு மயிலையின் கடற்கரைப் பகுதி செயின்ட் தாமசின் நினைவாகச் சாந்தோம் என்றழைக்கப்படுகிறது.[23]

## பெயர்க் காரணங்கள்

திருமயிலைக்குரிய பெயர்க்காரணங்கள் பல ஒரு காலத்தில் சிவபெருமான் உமையம்மையாருடன் திருக்கயிலாயத்தில் வீற்றிருந்தார். அப்போது அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க ஐந்தெழுத்தின் பெருமையையும், திருநீற்றின் மகிமையையும் பற்றிப் பெருமான் விளக்கம் செய்து கொண்டிருக்கும்போது ஒரு மயில் அதன் தோகையை விரித்தாடியது. அதன் அழகை உற்று நோக்கிய அம்மையார் அதன் ஆட்டத்தில் தமது கவனத்தைச் செலுத்தினார். இதைக் கண்ணுற்ற சிவபெருமான் 'நீ பூலோகத்தில் மயில் உருப்பெற்றிடுவாய்' என்பதாக ஆணை பிறப்பித்தார்.

இந்நிலைக்கு வருந்திய தேவியார், 'இதைத் தவிர்ப்பது எங்ஙனம்?' எனக் குறையிரப்ப இறைவன் புண்ணிய நாடாகிய தொண்டை நாட்டிற்குச் சென்று தவமியற்றுவாய்' என்பதாகக் கூறினார். அவ்வாறே அம்மையார் தொண்டை நாட்டின் பகுதியாக விளங்கி இப்பொழுது மயிலாப்பூராக அமைந்துள்ள பகுதியில் புன்னை மரத்தின் கீழ்ச் சிவலிங்கம் ஒன்றை

உருவாக்கி வழிபட்டு வந்தார். அப்போது சிவபெருமான் தேவியின் முன் தோன்றி, மயிலாய் இருந்த பழி இன்று முதல் உன்னை விட்டகன்றது. கற்பகவல்லியென்பதாகப் பெயர் உனக்காகுக! என்பதான வரமும் தந்தார். உமாதேவியாரும் பரமனை நோக்கி அடியேன் இங்குத் தவம் செய்து உய்ந்தேன். இப்பெரும் பகுதிக்கு மயிலை என்னும் பெயர் ஓங்க வேண்டும். என்னுடன் தாங்கள் பிரியாது இங்கிருக்க வேண்டும். இங்கு வந்து வழிபடுபவர்களுக்கெல்லாம் தாங்கள் அருள் புரிய வேண்டும் என வேண்டிக் கொண்டபடியால் மயிலை என்னும் பெயர் பெற்றது என்று திருமயிலைத் தலபுராணம் கூறுகிறது.[24]

***புன்னாகவனத் தெழிச்சேர் கயிலை மலையுமை மயிலாய்ப் பூசை செய்யு***

***நன்னாமத்தான் மயிலையென விளங்கு மூதூர்*** [25]

என்றும் மயிலைத் தல புராணம் கூறுகிறது.

## கபாலீசுவரர்

சிவபெருமானுடைய திருவுருவங்களில் பிரம சிரச்சேத மூர்த்தியும் ஒன்றாகும்.[26] இந்தத் திருவுருவம் ஏற்பட்டதற்கான கதைகளைக் கூர்மபுராணம், வராக புராணம், கந்த புராணம் ஆகிய புராணங்கள் கூறுகின்றன.[27] பிரமன் சிவமூர்த்தியைப் போலத் தானும் ஐந்து சிரம் உடையவனென்று செருக்கடைந்த காலத்தில் அவன் நடுச் சிரத்தைக் கிள்ளிப் பலியேற்ற இச்சிவ உருவத்தைக் கபால மூர்த்தி என்பர்.[28] கபாலம் என்பதற்கு மண்டையோடு என்பது பொருளாகும். கபாலத்தை ஏந்தியவன் கபாலி எனப்பட்டான்.

சிவபெருமானை ஈசுவரன் என்றழைப்பர்; கபாலம் ஏந்திய ஈசுவரன் கபாலீசுவரன் ஆனான். பல்லவர் காலத்தில் சிவன் திருக்கோயில்களை ஈசுவரம் என்று அழைக்கும் மரபு ஏற்பட்டது. திருஞானசம்பந்தரும்

பூம்பாவைப் பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் கபாலீச்சரம் என்று திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலைக் குறிப்பிட்டுள்ளார்.[29]

காபாலிகர்கள் அக்காலத்தில் இருந்ததால் திருமயிலைச் சிவன் கோயில் 'காபாலீச்சரம்' என்றழைக்கப்பட்டது என்று மொ.அ. துரையரங்கனார் கூறுகிறார்.[30] அக்காலத்தில் திருவொற்றியூர்ச் சிவன் கோயிலில் காபாலீகர் நிறைந்திருந்ததைப் போலத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலிலும் காபாலிகர்கள் இருந்தமை. கபாலீசுவரன் என்னும் பெயரினால் புலப்படும்.[31] கபாலிகர்கள் திருவொற்றியூரிலிருந்ததைப் போலத் திருமயிலையிலும் இருந்திருக்க வேண்டும் என்பர்.[32]

திருமயிலையிலுள்ள இறைவன் பெயர் கபாலீசுவரர் அன்று; கபாலீசுவரர் என்றால் கபாலங்களுக்குத் தலைவர் என்று பொருள்படும். ஆகவே இப்பெயர் பொருந்தாது. காபாலிகர்களின் கடவுள் ஆனதால் கபாலீசுவரர் என்பதே அங்குள்ள இறைவனின் பெயர் என்று டேவிட் என் லோரென்சன் கூறுகிறார்.[33] மகாவிரதம் என்பது காபாலி விரதத்தைக் குறிப்பிடும் என்று ஆர்.என்.நந்தி கூறுகிறார்.[34] பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய திருமயிலை உலாவில்.

*ஆலாலம் உண்டோனை அர்ச்சிக்கும் ஐந்நூற்று*
*மேலாம் மகா விரத வேதியர்*

என்று கபாலீசுவரர் வீதியுலா வந்தபோது அவரைச் சுழ்ந்து வணங்கியவர் வேதியர்களைப் பற்றியும் இடம் பெற்றுள்ளது.[35]

இவற்றால் காபாலிகர்களுக்கு உரியது இக்கோயில். இக்கோயிலிலுள்ள இறைவன் பெயர் கபாலீசுவரர்; இப்பெயரே கபாலீசுவரர் என்று மருவியது.

## பழைய கோயில் இருந்ததாகக் கூறப்படும் இடம்

கபாலீசுவரர் திருக்கோயில் இப்போதுள்ள இடத்தில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு புதிதாகக் கட்டப்பட்டதென்றும், பழைய கோயில் சாந்தோம் கடற்கரையில் இருந்ததென்றும் ஆராய்ச்சி அறிஞருள் ஒரு சாரார் உரைக்கின்றனர்; மற்றொரு சாரார் இக்கருத்தை மறுத்து, பழைய கோயில் இப்பொழுது உள்ள இடத்திலேயே இருந்ததென்றும், அது இடிக்கப்பட்டவுடன் அவ்விடத்திலேயே புதிய கோயில் திரும்பக் கட்டப்பட்டதென்றும் கூறுகின்றனர்.

## சாந்தோம் கடற்கரையோரக் கபாலீசுவரர் கோயில்

கி.பி.16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாந்தோம் கடற்கரையிலிருந்த கோயில் போர்த்துக்கீசியர்களால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்நூல் கூறும் புதிய செய்தி, இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலும், குளமும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன், மயிலை நாட்டு முத்தையப்ப முதலியாராலும் அவருடைய வாரிசுகளினாலும் கட்டப்பட்டது என்பதேயாகும். இச்செய்திக்கான ஆதாரத்தை இந்நூல் குறிப்பிடவில்லை.[36]

1. கி.பி.1697 இல் சாந்தோம் கோட்டை இடிக்கப்பட்டது. அக்கோட்டையின் இடிபாடுகளைக் கொண்டு இக்கோயிலை முத்தியப்பன் கட்டினான். பழைய கோயில் திரும்பக் கட்டப் பெற்றது என்பது பொருந்தாததாகும் என்பவையேயாகும்.[37]

இச்செய்தி திருமயிலை உலா வெளியான பிறகு கிடைத்த புதிய செய்தி என்று குறிப்பிடுகின்றார். இச்செய்தி இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புத்துறை 1965 இல் வெளியிட்ட ‘Temples of Madras State’.

Chingleput District and Madras City' என்னும் நூலில் முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இது புதிய செய்தியன்று.[38]

## கோயில் அமைப்பு

மனித உடம்பில் உள்ள பாதங்கள் கோபுரம்; முழங்கால் ஆஸ்தான மண்டபம், தொடை நிருத்த மண்டபம், தொப்புள் பலிபீடம், மார்பு மகா மண்டபம், கழுத்து அர்த்த மண்டபம், சிரம் கருப்பக்கிருகம், சிரத்தில் உள்ள இரு செவிகளில் வலச் செவி தட்சணாமூர்த்தி, இடச்செவி சண்டிகேசுவரர், மார்பில் நடராஜர், கழுத்தில் நந்தி, வாய் ஸ்நிபந மண்டப வாசல், மூக்கு ஸ்நப மண்டபம், புருவ மத்தி லிங்கம், தலை உச்சி விமானமாகும்.[39]

கோயிலில் மூல விக்கிரத்தைப் பிரதிட்டை செய்துள்ள, கருவறை மிகச் சிறியதாக, அருச்சகர் மட்டும் நின்று செய்யும் இடமாக அமையும். அதனையடுத்து அர்த்த மண்டபம், கருவறையை விடச் சிறிது பெரியதாக இருக்கும். இங்கு நின்றபடி அருச்சகர் தீபாராதனை செய்வர். இதனையடுத்து மேலும் அகலமாக அமைக்கப்படுவதே மகா மண்டபம். இவை தவிர சுற்றுப் பிரகாரங்களும், நடன அரங்குகளும் திருச்சுற்று மதில்கள், கோபுரங்கள், கருவறையின் மீது விமானம் ஆகியவையும் கட்டப் பெறும் வழக்கம் இருந்தது. சைவத் திருக்கோயில்களில் முதன்மைத் தெய்வம் சிவலிங்கமேயாகும்.

பரிவார தெய்வங்கள் என்ற நிலையில் விநாயகர், முருகர் ஆகியோரையும் பிரதிட்டை செய்வர். கருவறை வாயிலில் துவார பாலகர் இருவர் நிற்பர். கருப்பக் கிருகத்தின் வெளிப்புறம் தெற்குச் சுவரில் தட்சிணாமூர்த்தியையும் மேற்குச் சுவரில் லிங்கோற்பவ மூர்த்தியினையும் வடக்குச் சுவரில் துர்க்கையினையும் தாபிப்பர். துர்க்கைக்கு எதிரே எதிர் முகமாகத் தனியே சண்டேசுரரைத் தாபிப்பர். அவர் தெற்கு நோக்கி

இருப்பார். சோமாஸ்கந்தர், சபாபதி, பைரவர் போன்ற சிவன் திருக்கோலங்களும் சுற்றுத் தெய்வங்களாகப் பிரதிட்டிக்கப்படுதல் உண்டு.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் பிரதிட்டை செய்யப்பட்டிருப்பர். வெளிப்பிரகாரத்தில் வாயிலுக்கு நேரே பலிபீடம், பெரிய நந்தி, கொடிமரம் ஆகியவை இடம் பெறும். நவக்கிரகங்களைப் பிரதிட்டை செய்யும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. நாளடைவில் சிவன் தவிர விநாயகர், முருகன் போன்ற தெய்வத் திருக்கோலங்களும் முதன்மை திருக்கோலங்களாகக் கோயில்களில் பிரதிட்டிக்கப்படலாயின.[40]

## கபாலீசுவரர் கோயில் அமைப்பு

**கோயில் எல்லை:** கிழக்கில் பொன்னம்பல வாத்தியார் தெரு, மேற்கில் கிழக்குக் குளக்கரைத் தெரு, தெற்கில் குமரகுருநாத முதல் தெரு, வடக்கில் வடக்கு மாடவீதி ஆகியவைகளை எல்லையாகக் கொண்டு திருச்சுற்று மதிலோடு கபாலீசுவரர் திருக்கோயில் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.[41]

**இராஜகோபுரம் :** கோயிலின் கிழக்குப் பகுதியில் இராஜகோபுரம் உள்ளது. இது எழுநிலை மாடங்களோடு உள்ளது. இக்கோபுரம் ஏறத்தாழ கி.பி.1902 ஆம் ஆண்டு வாக்கில் கட்டப் பெற்றதென்று கூறுகின்றனர்.[42] இக்கோபுரத்தின் உயரம் சற்றேறக்குறைய 125 அடிகளாகும். இந்த இராஜகோபுரம், கபாலீசுவரர் கோயில் அறங்காவலர் அரசூர் பார்த்தசாரதி முதலியார் அவர்களால் 1947 ஆம் ஆண்டு, சீர்திருத்தம் செய்யப் பெற்றது.[43] 1948 ஆம் ஆண்டில் கும்பாபிடேகம் நடைபெற்ற போது மீண்டும் இக்கோபுரம் சீர்திருத்தம் செய்யப் பெற்றது.[44]

**கூத்தாடும் பிள்ளையார்:** இராஜகோபுரம் வழியாக உள்ளே நுழைந்தவுடன் கூத்தாடும் பிள்ளையார் சந்நிதி உள்ளது. அதை அடுத்த

சந்நிதியில் அண்ணாமலையாரும் உண்ணாமுலையம்மையும் கோயில் கொண்டுள்ளனர். எதிர்ப்புறத்தில் பசுமடம், வாகன அறைகள், மடைப்பள்ளி ஆகியவை தென்கிழக்கு மதில் சுவரை ஒட்டி அமைந்துள்ளன.

**கபாலீசுவரர்:** இங்குள்ள இறைவன் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். இவரைப் புன்னை வனத்து ஈசன், வேத நகரினான், சுக்கிர பரியான், கபாலீச்சரத்தினான் என்றும் அழைக்கின்றனர்.[45] கபாலீசுவரரைப் பூம்பாவை ஈசன்[46], புன்னை வன மயூரநாதன், காபாலி மாநகரான்[47] என்றும் போற்றுகின்றனர்.

இத்தலத்தில் இறைவன் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறான். சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. அவற்றுள் மேற்கு நோக்கிய திருமுகம் சத்தியோஜாதம் எனப்படும். இம்மூர்த்தி வழிபடுவோர்க்கு உடனே காட்சி தந்து அருள் வழங்கும் என்று கூறுகின்றனர்.[48]

இவ்விறைவனை, 'நற்றாமரை மலர் மேல் நான்முகனும் நாரணனும் உற்றாங் குணர்கிலாமூர்த்தி' என்று திருஞானசம்பந்தர் சிறப்பித்துப் பாடியுள்ளார்.[49]

**திருமுறை மண்டபம்:** தெற்குப் பிரகாரத்தின் இறுதியில் பழனி ஆண்டவர், வாயிலார் நாயனார் சந்நிதிகள், வில்வமரம் ஆகியவை உள்ளன. வாயிலார் நாயனார் சந்நிதிக்கு எதிரில் வேத மண்டபம் உள்ளது. வாயிலார் சந்நிதிக்குப் பக்கத்தில் நூலகம் உள்ளது.

**கபாலீசுவரர் சந்நிதி:** கபாலீசுவரர் திருச்சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. கருவறை முன் துவார பாலகர்களும், அலங்காரப் பிரபைத் தீபமும், கருவறையினுள் சூரிய சந்திரப் பிரபை அலங்கார விளக்கும் உள்ளன. இச்சந்நிதி உட்பிரகாரத்தில் முருகன், வள்ளி, தெய்வயானை உற்சவ

மூர்த்திகள் சந்நிதி, நடராஜர், சிவகாமசுந்தரி, பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர், மாணிக்கவாசகர் சந்நிதிகளும் உள்ளன.

இவற்றையடுத்து சந்திரசேகர், பார்வதி, பிச்சாடனார், ஆறுமுகப் பெருமான், கூத்தாடும் கணபதி, சண்டிகேசுவரர் ஆகியோரும், அறுபத்து மூன்று நாயன்மார்களின் உற்சவச் சிலைகளும் காட்சியளிக்கின்றது.

அடுத்து சங்கரலிங்கம், அகோர வீரபத்திரர், சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகரும் உள்ளனர்.

**தீர்த்தம்:** கபாலீசுவரர் கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் நீராழி மண்டபத்தோடு கூடிய பெரிய திருக்குளம் ஒன்று இருக்கிறது. இது கபாலி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இதனை மயிலை நாட்டு முத்தையப்ப முதலியார் கட்டினர் என்பர்.[50]

*திருமயிலை உலாவிலும்,*
*பொன்கோவிலும் மதிலும் புண்டரிகப் பூந்தடமும்*
*........................................................................................*
*நேசமுடனே அமைத்து நித்தம் நித்தம் - பேசும்*
*அன்பின் போற்றி செய்யும் முத்தியப்பன்*

என்று திருக்குளத்தைத் தோண்டுவித்தவன் முத்தியப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[51] இந்நூலில் இக்குளம் புண்டரிகப் பூந்தடம் தாமரைத் தடாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போதும் இக்குளத்தில் தாமரைக் கொடி நிறைந்து உள்ளது. ஆகவே இக்குளம் பதினாறாம் நூற்றாண்டில் தோண்டப் பட்டிருக்க வேண்டும். இக்குளத்துக்குப் படிக்கட்டுகள் அமைக்கும் திருப்பணி 1810ஆம் ஆண்டுத் தொடங்கி 1925ஆம் ஆண்டு நிறைவடைந்தது.[52]

இத்திருக்குளம், கபாலீசுவரர் கோயிலை விடப் பழமையானது போல் காட்சியளிக்கின்றது என்று எஸ்.கல்யாணசுந்தரம் கூறுகிறார்.[53] 1798 இல் எழுதப்பட்ட சென்னை நகரப் படத்தில் (Map of Madras) மயிலைத் திருக்குளம் காட்டப்பட்டிருக்கிறது.[54]

இதற்குச் சக்தி கங்கை[55], முத்தி தீர்த்தம்[56] என்னும் வேறு பெயர்களுமுண்டு. கலிங்க தேசத்து அரசன் தருமன் என்பவன் மகன் சாம்பவன் பஞ்சமா பாதகங்களைச் செய்து கடைசியாகப் பங்குனி உத்திரத்தில் இத்தீர்த்தத்தில் மூழ்கி உள்ளங்கசிந்து தான் செய்த பாவங்களுக்காக வருந்தி மெய்யன்போடு கபாலீசுவரரைக் கண்டு தொழுதான்; பிறகு முத்தி அடைந்தான் என்று தலபுராணம் கூறுகிறது.[57] பவுர்ணமியன்றும், விதிபாத யோகதினத்தன்றும், ஆதி வாரத்தன்றும், ஐப்பசித் திங்களில் வரும் திருவோண நட்சத்திரத்தினன்றும், மன உருக்கத்தோடு இத்தீர்த்தத்தில் நீராடித் தொழுகின்றவர்கள் முத்தி அடைவார்கள் என்று கூறப்படுகின்றது.[58]

இக்குளத்தின் மேற்குக் கரையில் எட்டுக்கால் மண்டபத்திற்கு அருகில் ஜ்யேஷ்டாதேவியின் உருவச்சிலை உள்ளது. இதனை மூதேவி என்றும் குறிப்பிடுவர். இச்சிலை பழைய கபாலீச்சரத்தைச் சேர்ந்தது என்று கூறலாம் என்றும், இச்சிலை கி.பி.ஏழாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதென்றும் மா.இராசமாணிக்கனார் கருதுகிறார்.[59]

இக்காலத்தில் குளத்தின் கிழக்குக் கரை வெளிப் பகுதியில் புரோகிதம் செய்யும் அந்தணர்கள் குழுமி நிற்பர். மேற்குக் கரையில் காய்கறிக் கடைகளும், வடக்குக் கரையில் சிறுவர் விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகளும் நிறைந்துள்ளன.

தல விருட்சம் : இத்தலத்திற்குரிய மரம் புன்னை மரம். முற்காலத்தில் மயிலை புன்னை வனமாக இருந்தது என்று தலபுராணங்கள் கூறுகின்றன. திருஞானசம்பந்தரும் பூம்பாவைப் பதிகத்தில் முதற்பாடலில் 'மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை' என்று பாடியுள்ளதும் இதனை உறுதிப்படுத்துகிறது. 'புன்னை வனத்து ஈசன்' என்று திருமயிலை உலாவும் குறிப்பிடுவதனால் மயிலை புன்னை மரங்கள் நிறைந்த இடமாயிருந்தது என்பது புலப்படும்.[60]

## கோயிற் சிறப்புகள்

உமையம்மையார் மயிலுருக் கொண்டு கபாலீசுவரைப் பூசித்தது; முருகப் பெருமான் மயிலைநாதனை வழிபட்டுச் சக்திவேல் பெற்றது; நான்முகன் பூசை செய்து தனது பாவத்தைப் போக்கிக் கொண்டது ஆகிய சிறப்புகளையுடையது கபாலீசுவரம். கண்ணிழந்த சுக்கிரன் கபாலீசுவரரை வழிபட்டு மீண்டும் கண்பார்வை பெற்ற பெருமையுடையது. இராமபிரான் தங்கி வணங்கித் திருவிழா நடத்திய சிறப்புப் பெற்றது.[61] வாயிலார் நாயனார் வழிபாடு செய்த இடம், சம்பந்தர், அப்பருடைய தேவாரப் பாடல்கள் பெற்ற திருக்கோயில், அங்கம் பூம்பாவையான அற்புதச் செயல் நிகழ்ந்த இடம் என்னும் சிறப்புகளையும் உடையது கபாலீசுவரமாகும்.

## பூம்பாவை சந்நிதி

சிவநேசரின் மகள் பூம்பாவை மலர் பறிக்கும் போது பாம்பு தீண்டி மாண்டாள். அவளைத் தகனம் செய்து எலும்பையும் சாம்பலையும் குடத்தில் இட்டுக் கன்னி மாடத்தில் வைத்தனர். திருஞானசம்பந்தர் திருமயிலை வந்த போது, அக்குடத்தைக் கபாலீசுவரர் கோயிலில் கொண்டு வந்து வைத்து 'மட்டிட்ட புன்னை' என்று தொடங்கும் பதிகத்தைப் பாட உயிர் பெற்றெழுந்தாள். சிவநேசர் அவளை மணந்து கொள்ளுமாறு சம்பந்தரிடம்

கூறினார். அவர் பூம்பாவைக்கு உயிர் கொடுத்ததால், தான் தந்தை முறை என்று கூறி மறுத்தார். பூம்பாவை சிவத் தொண்டு செய்து சிவப் பதவி அடைந்தார்.[62] இந்நிகழ்ச்சியை நினைவுகூறும் வகையில் பூம்பாவையாருக்குக் கபாலீசுவரர் கோயில் மேற்குக் கோபுர வாயிலின் வடக்கு உட்புறத்தில் கொடி மரத்துக்கு எதிரில் தனிச் சந்நிதி உள்ளது.

அங்குள்ள பூம்பாவை உருவம், குடத்திலிருந்து வருவது போல் அமைக்கப்பட்டுள்ளது. பூம்பாவை உயிர் பெற்றெழுந்த செயல் காரணமாகக் கபாலீசுவரருக்குப் பூம்பாவை ஈசன் என்னும் பெயர் வழங்கப் பெற்றது. இவைகளைக் கல்வெட்டுகள் மூலமாகவும்[63] திருமயிலை உலா மூலமாகவும் அறியலாம்.[64]

*வைத்தீசுவரன் கோயில் விளக்கழகு*
*மாயூரம் கோபுர அழகு*
*திருவாரூர் தேர் அழகு*

என்ற மயிலையில் வரிசையில் மாட வீதிகள் சிறப்பித்துப் பேசப்படுகின்றன திருநாவுக்கரசர் ‘மங்குல் மதி தவழும் மாடவீதி மயிலாப்பில் என்று பாடியுள்ளார்.[65] நீளும் மணிமாட வீதிகள், ‘வாளைக்கும் பொன் மாடவீதி’ போன்ற தொடர்களில் திருமயிலை உலா, மயிலை மாடவீதிகளைச் சிறப்பித்துக் கூறுகிறது.[66]

## புராணங்கள், இலக்கியங்கள் பெற்ற பெருமை

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர் ஆகியோரால் பாடப் பெற்ற பெருமையுடையது கபாலீசுவரர் கோயில். இக்கோயில் இரண்டு தலபுராணங்களாகப் பாடப்பட்டுள்ளன. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான் அவர்களும் மயிலை நாதமுனி முதலியார் அவர்களும் திருமயிலைத் தலபுராணம் என்னும் பெயரில் தனித்தனியே புராணம் பாடியிருக்கிறார்கள்.

திருமயிலை உலா, திருமயிலைக் கலம்பகம், திருமயிலைப் பிள்ளைத் தமிழ், திருமயிலைக் கோவை, திருமயிலை உவமை வெண்பா, திருமயிலை வெண்பா, திருமயிலை யமக அந்தாதி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பதிகங்கள், திருக்குருகூர் ஞான சித்த சுவாமிகளின் பதிகங்கள், அருணாசல முதலியார் பதிகங்கள், திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருமயிலை நான்மணிமாலை, பா.கங்காதர நாவலரின் நூல்கள், கீர்த்தனைகள், தோத்திரங்கள், பதிகங்கள், மாலைகள் முதலான பல்வகை இலக்கியங்கள் கபாலீசுவரர் கோயிலில் உள்ள தெய்வங்களின் மீது பாடப் பெற்றுள்ளன.

## வரலாற்றுச் சிறப்பு

கி.பி.1672 இல் பிரெஞ்சுக்காரர்களுக்கும் துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சுப்படையின் ஒரு பகுதி இப்போதுள்ள கோயிலில் பதுங்கியிருந்த செய்தியால் வரலாற்றுச் சிறப்புப் பெறுகிறது.[67]

கபாலீசுவரர் கோயில் இருக்குமிடம் பற்றிய கருத்துகள் இரண்டாகும். முதல் கருத்து பழைய கபாலீசுவரர் கோயில், சாந்தோம் கடற்கரையருகே இருந்தது; இரண்டாவது கருத்து இப்போது கோயில் இருக்குமிடத்திலேயே பழைய கோயில் இருந்தது என்பதுமேயாகும்.

இரண்டாவது கருத்தைச் சான்றுகள் காட்டி வலியுறுத்துகிறார் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை. அவர் இப்போதுள்ள கோயிலுக்கு அருகே முற்காலத்தில் கடல் இருந்தது என்று கூறுகிறார். இவர் கருத்துக்கு எஸ். கல்யாண சுந்தரம் கூறும் கருத்து மறுப்பாக அமையும். அவர் இப்போதுள்ள கடல் பகுதியிலேயே நிலப்பகுதி இருந்திருக்க வேண்டுமென்பதைத் தக்க ஆதாரங்களோடு காட்டுகிறார். எனவே கடற்கரை அருகே பழைய கோயில் இருந்ததென்பதே பொருந்துவதாகும்.[68]

இரண்டாவது முக்கியக் காரணமாக, பழைய கபாலீசுவரர் கோயிலைப் போர்த்துக்கீசியர் இடித்ததும் மயிலை மக்கள் இக்கோயிலைப் பழைய கற்களைக் கொண்டு அதே இடத்தில் திரும்பக் கட்டினார்கள் என்று கூறுகின்றார். இக்கருத்தை மறுப்பதற்குத் திருமயிலை உலா பெரிதும் உதவுகிறது. இந்நூலில் இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலும், குளமும், மண்டபங்களும், மாட வீதிகளும், நந்தவனங்களும் மற்று உளவும் நேசமுடனே முத்தியப்பன் அமைத்தான் என்று கூறப்பெறுவதால்,[69] இக்கோயில் பழைய கோயில் இருந்த இடத்தில் திரும்பக் கட்டப்பட்ட (rebuild) கோயிலன்று, புதிதாக வேறு இடத்தில் கட்டப்பட்ட கோயில் என்பது நன்கு விளங்கும்.

மூன்றாவது காரணம், அழகிய மாடவீதிகளை உடையது மயிலை என்று ஆழ்வார்களும், அப்பர், சம்பந்தரும் குறிப்பிட்டுள்ளார்கள். இப்பொழுதும் அழகிய மாட வீதிகள் உள்ளன. ஆகவே இது பழைய கோயில் என்று கூறுகின்றனர்.

இப்போதுள்ள கோயில், குளம், மாடவீதி ஆகியவைகள் இருக்குமிடம் மயிலையின் தெற்குப் பகுதி இப்பகுதி புதிதாக ஏற்பட்ட பகுதி என்பது எஸ்.கல்யாண சுந்தரம் அவர்கள் 'ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் மாடவீதிகளில் ஒரு சில வீடுகளே இருந்தன' என்று கூறுவதால் புலப்படும்.[70]

நூற்றாண்டுகளுக்கு முன் மாடவீதிகளைச் சுற்றிச் சத்திரங்களும், மடங்களுமே இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. குன்றக்குடி ஆதீனம், குமார தேவர் மடம் ஆகியவையும், சித்திரர் சத்திரம் முதலிய சத்திரங்களும், இன்றும் உள்ளன. சத்திரங்கள் தான் வீடுகளாக மாறியுள்ளதை சென்று பார்த்தாலே புலப்படும். அது மட்டுமல்லாமல் 'முத்தியப்பன் மாட வீதிகள் அமைத்தான்' என்று தெளிவாகத் திருமயிலை

உலா கூறுவதாலும் இப்போதுள்ள கோயில் பழைய கபாலீச்சரம் அன்று என்பது புலப்படும்.[71]

இக்காரணங்களால் இப்போதுள்ள கோயில் கி.பி.16 ஆம் நூற்றாண்டில் மயிலை நாட்டு முத்தியப்ப முதலியாரால் கட்டப்பெற்ற புதிய கோயில் என்பது தெளிவாகப் புலனாகும்.

## திருவொற்றியூர்

***பாட்டும் பாடிப் பரவித் திரிவார் ஈட்டும் வினைகள்***
***தீர்ப்பார் கோயில் காட்டும் கலமும் திமிலும் ஒட்டும்***
***திரைவாய் ஒற்றியூரே*** [72]

எனத் திருவொற்றியூரைச் சுந்தரர் போற்றுகின்றார். இவரது காலத்தில் மட்டுமன்று இவருக்கு முன்னும் இன்று வரையும் சிறந்த வளமும், வழிபாட்டுப் பெருமையும் உடைய தொன்மை வாய்ந்த திருத்தலமாக விளங்கும் பெருமையுடையது. தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகிய திருவொற்றியூர். சுந்தரர் மட்டுமன்றி அடியார் பலரும் போற்றிப் பரவிய திருத்தலம். இலக்கியம், சமயம், இருப்பிடப் பழமை, கல்வெட்டுக்கள், வரலாறு என்ற ஐந்து ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வூர் சிறப்புற்று விளங்குகிறது.

### இருப்பிடம்

திருவொற்றியூர், சென்னை பூங்கா நகரில் உள்ள புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே கல்கத்தாவுக்குச் செல்லும் புகைவண்டிச் சாலையில் எட்டுக்கிலோ மீட்டரில் உள்ளதோர் கடற்கரை நகரம் ஆகும். வண்ணாரப் பேட்டையிலிருந்து திருவொற்றியூர்ச் சாலை வழி வடக்கே எட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இவ்வழகிய நகரம்.[73]

தமிழ்நாட்டின் ஒரே பகுதியாகிய தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டனுள், மிகப் பழமையும், முதன்மையும் பெற்றது திருவொற்றியூராகும். அழகிய கோயில், பெரிய குளம், அகலமான தேரோடும் மாடவீதிகள் முதலியவற்றை உடையதும் இந்நகரமேயாகும்.[74] ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிய பின்பு அதனோடு சேர்ந்து திருவொற்றியூரை மையமாகக் கொண்டு வடசென்னை வளரத் தொடங்கியது.[75]

## பெயர்

ஒற்றியூர் என்றும் திரு என்ற அடைமொழி சேர்த்தும் திருவொற்றியூர் என்றும் வழங்கப்பட்டு வருகிறது. புராணங்கள் ஒற்றியூர் என்ற பெயருக்கான காரணங்களைக் கூறுகின்றன. இவ்வூர் ‘‘திரையினார் புடைசூழ் திருவொற்றியூர்’’ என்று நாவுக்கரசர் பதிகப் பாடலால் போற்றப்படுகிறது.[76] பிரம்மதேவரது தவத்தில் அவரது யோகத் தீயின் நடுவுள் இறைவர் தோன்றி அத்தீயையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளி உறுதி வெள்ளத்தை மேல் வராது தடுத்தமையின் இப்பெயர் பெறுகின்றது என்று தலபுராணம் கூறும்.[77]

ஒற்றியூர் என்னும் பெயர் ‘ஒற்றி’ என்ற சொல்லிலிருந்து வந்தது. ‘ஒற்றி’ என்றால் ஒற்றுமைப்படுத்தல், ஒற்றிக் கொள்ளுதல், ஒற்றியீரம் வாங்குதல், அடமானம் வைத்தல், ஒன்றிற்படும்படி சேர்தல், விலகியிருத்தல், என்று பல்வேறு பொருள்படும்[78] ஒற்றி என்றால் வடமொழியில் ‘ஆதி’ என்னும் பொருள்படும். பதினெண் புராணத்தில் பத்தாவது புராணமாகிய சைவ புராணத்தில் வரும் பதும புராணத்திலும், பிரமாண்ட புராணத்திலும் ‘ஆதிபுரி’ என்று இவ்வூர் குறிக்கப்படுகிறது. வாசுகி என்னும் மாநாகத்தைத் தன்னுடைய திருமேனியில் ஒன்றுபடச் செய்து ஒற்றியதாலும் இத்தலம்

ஒற்றியூர் என வழங்கப்படுகிறது.[79] இதன் காரணத்தால் ‘‘படம் பக்கங் கொட்டுங் கடவொற்றியூர்[80] என்றும் ஒற்றியூர் இறைவருக்கு படம் பக்கநாதர் என்றும் திருப்பெயர் வழங்கப்படுவது அறிய முடிகின்றது. வடமொழியில் இவ்வூர் ‘ஆதிக் கிராமம்’, ‘ஆதிபுரி’, ‘ஒற்றிமூதூர்’ என்று வழங்கப்பட்டதை கல்வெட்டுச் செய்திகளால் அறிய முடிகின்றது.[81]

ஒற்றி ஊர் என்ற இரு சொற்கள் சேர்ந்து ஒற்றியூர் என்று ஆகியுள்ளது.

*ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்*
*யாரும் சார்த்தி அவையவை பெறுமே* [82]

என்ற தொல்காப்பிய நூற்பாவிலிருந்து இச்சொல்லின் பழமையை உணர முடிகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்று வரை ஊர் என்ற சொல் தமிழர் வாழ்விடத்தை உணர்த்தும் ஒரு பொதுச் சொல்லாகக் கருதப்பட்டு வருகிறது என்று குறிப்பிடுவதும் கருதத்தக்கது.

## இலக்கிய ஆதாரம்

முதன் முதல் பல்லவர் காலப் பக்தி இலக்கியத்தில் தான் ஒற்றியூர் பற்றியக் குறிப்பு இடம் பெறுகின்றது. ஐயடிகள் காடவர்கோன் என்னும் பல்லவ அரசர் ‘சிவத்தனி வெண்பா’ பாடினார் என்று பெரியபுராணம் குறிக்கின்றது.

இவர் காலம் கி.பி.550–575 ஆகும். இவரே மூன்றாம் சிம்மவர்மன் என்று அழைக்கப்படுவர். இவர் பாடிய வெண்பாப் பாடலில் இவ்வூர் ‘ஒற்றியூர்’ என்று குறிக்கப்படுகிறது. தேவார ஆசிரியர்கள் மூவரும் ‘ஒற்றியூர்’ என்றே குறிப்பிட்டுள்ளமை இவர்கள் காலத்திலும் இத்தலத்தின் பெயர் மாறாத தன்மையைப் புலப்படுத்துகின்றது.

பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தார் திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃதில் 'ஒற்றிமாநகர்' என்ற பெயரை வழங்கியுள்ளார்.[83] இவர் காலத்தில் மாநகராக இருந்த தன்மை தெரிய வருகின்றது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் 'ஆதிபுரி'[84] ஒற்றியூர் வளநகரம்[85] என்னும் பெயர்கள் இவ்வூருக்கு வழங்கியதைப் பெரிய புராணம் வாயிலாக அறிய முடிகின்றது.

கி.பி.19 ஆம் நூற்றாண்டில் இராமலிங்க வள்ளலார் அருட்பாவில் ஒற்றியூரை வெற்றியூர் என்கிறார்.[86]இஃது வெற்றியைத் தரும் ஊர் என்ற பொருளிலேயே இவ்வூர் வழங்கப்பட்டமையை அறிய முடிகின்றது.[87] இன்று இத்தலம் சென்னை வாழ் மக்களால் திருவந்தூர், திருவொற்றியூர் எனவும் மருவி அழைக்கப்படுகிறது,

## திருவொற்றியூருக்கு வழங்கும் பிற பெயர்கள்

இவ்வூர்க் கோயில் பிரமனால் பூசிக்கப் பெற்றமையின் 'சொர்ணபுரி' என்றும் நாராயணன் பூசித்தமையின் 'நாரணபுரி' என்றும் வேதங்கள் பூசித்தமையின் 'வேதபுரி' என்றும் மேலும் 'சிவபுரி' பதுமபுரி, வடபுரி, நிரந்தரபுரி என்றும் வழங்கப்பட்டுள்ளன. இத்திருக் கோயில் என்று பிறந்தது என்றுணர முடியாத தொன்மை உடையதால் இத்தலத்திற்கு 'ஆதிபுரி' என்ற பெயரும் உண்டு என்கிறது தலபுராணம்.[88]

## சமயச் சான்று

கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்கு முன் திருவொற்றியூரைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு இலக்கியத்தில் காடவர் கோனின் சிவத்தனி வெண்பா தவிர வேறு சான்று கிடைக்கப் பெறவில்லை. இவ்வாறாயின் வேறொருவரும் இத்தலத்தைப் பற்றி இவருக்கு முன் பாடவில்லையா என்ற வினா எழுகின்றது. ஆனால் திருவொற்றியூர்ச் சிவன் கோயிலில் படம் பக்கநாயக தேவர் கோயில் என்று வீரராசேந்திரன் காலத்தில் (கி.பி.1067–68) கட்டப்பட்டது. அக்கோயில் மூர்த்தத்தின் பெயர்.

“காரானனைவிடங்கல்” என்பது[89], அப்படியானால் ‘காரானலை’ என்பது ஒற்றியூரின் பழைய பெயராதல் வேண்டும் என்று கொள்ள இடமுண்டு.

திருவொற்றியூர் லகுலீச பாசுபதர் வாழ்ந்த இடமாகவும் அச்சமய முதல்வரான லகுலீசர் சிறந்த (பம்பாய் மா. காணத்துக்) ‘கார்வான்’ என்ற ஊர் நினைவாக, அப்பா அப்பாசுபதர் போற்றிய இடமாகவும் விளங்கியது. ஆராணை சாரோ ஹணம் என்பன இன்றைய ‘கார்வான்’ என்ற ஊரின் பழைய பெயர்கள்.[90]

## திருவொற்றியூர் பற்றிய தலபுராணங்கள்

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பதிப்பு | பிற குறிப்புகள் |
|---|---|---|---|
| 1. | திருவொற்றியூர் புராணம் | தருமபுர ஆதினத்துத் தம்பிரான், சபாபதி முதலியார் பொழிப்புரை ஏசியாடிக் அச்சக்கூடம் 1869 | 15 சருக்கங்கள் |
| 2. | திருவொற்றியூர் புராணம் | அஷ்டாவதனம் பூவை கல்யாண் சுந்தர முதலியார், மனோன்மணி அச்சுக்கூடம், 1911 | 15 சருக்கர்கள் |
| 3. | திருவொற்றியூர் தலபுராணம் சாரம் | காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகள் 1936 | 18 மான்மியம் |
| 4. | உரைநடை | திரு.ப.இராமநாதம் பிள்ளை, சென்னை. 1964 | 21 சருக்கர்கள் |

## தலபுராணச் சருக்கம்

தருமபுர ஆதினத்துத் தம்பிரான் நூலில் குணாலய விநாயகரை வாழ்த்தும் காப்புச் செய்யுளுடன் புராணம் தொடங்குகின்றது. தொடர்ந்து சுப்பிரமணியர், ஆதிபுரித்தியாகர், படம்பக்கநாதர், வடிவுடையம்மை, திருநந்திதேவர், சமயக் குரவர் ஆகிய நால்வரையும் தனித்தனியே போற்றியுள்ளார்.

பெரும்பாலான தலபுராணங்களில் நைமிசாரண்ய வனத்தில் சூதமுனிவர் பிற முனிவர்கட்கு அத்தலத்தின் பெருமையையும் அங்கு இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும் கூறுவது போலத் தொடங்குகின்றது.[91] இத்தகைய தொடக்கமே திருவொற்றியூர்ப் புராணத்திலும் காணப்படுகின்றது.

## திருத்தலச் சருக்கம்

சூதமா முனிவர் கூற்றாக இத்தலச் சருக்கத்தில் தொண்டை நாட்டின் சிறப்பு, அங்கு பாயும் பாலாற்றின் பெருமை[92], நாட்டின் சிறப்பு[93] பற்றிச் சொல்லியுள்ளார். அத்தகைய தொண்டை நாட்டில் சாதல் பிறப்பற்ற ஏகாம்பர நாதரை உமாதேவியார், கம்பர் நீராடி தனமிரண்டும் புதைய மனங்கரைந்து கலிப்பெழத் தழுவியனைத்து மகிழும் காஞ்சித்தலமும், திண்ணனா ரென்னும் கண்ணப்ப நாயனார் உண்ணும், வாய் நீரான் என்னு மஞ்சன மாட்டி கண்ணை யெடுத்தப்பிய சீகாளத்தித் தலமும் சம்பான் சம்பாதி என்னும் ரண்டும் விழுமிய மனத்தால் வழுவில்லாது பூசை செய்யும் திருக்கழுகுன்றத் தலமும், மலரவன் தாளத்தட்ட, மாயவன் இடக்கை கொட்ட நந்தியும் வானாசுரணம் மத்தளத்தையும் குடவாத்தியத்தையும், முழங்க, காலி வெட்க காள கண்டனாடிய திருவாலங்காடு, என்னுந்தலமும், இரவி, மதி, பிரமன், குமரன் என்பவர் வழுத்த, அவர்கட்குக் காட்சியளித்தருளிய திருமுல்லைவாயிலென்னும் தலமும், திருநந்திதேவர் நீரை இரவும் பகலும் பொழிகின்ற நந்தி வாய்த் திருவூறல் (தக்கோலம்) என்னும் தலமும், அந்தணச் சிறுவன் வந்தனை செய்ய, தந்தலை சாய்ந்த திருவிரிசைத்தலமும், ஒரு போது ஈசன் மறு கூடு வந்து, உருகா திரந்து சுந்தரர்க்கு, அன்னமிட்ட திருக்கச்சதிராவக் கோயில் என்னுஞ் தலமும், மற்றும் திருநாவலூர் முதலிய பல தொண்டை நாட்டுத் தலங்கள் சூழப் பெற்றதும், திருஞானசம்பந்தர், ஒரு மாதில் அன்பை உருவாகச் செய்த திருமயிலையை அருகிலுடையதும்,

சென்னையம்பதிக்கு அருகிலுள்ளதும், கடலலைகள் சீவ படகுகள் கரையிற்சார, மடலவிழ் சோலைகள் சூழ்ந்த நகர் திருவொற்றியூர் என்று கூறினார்.[94]

## இலிங்கோற்பத்திச் சருக்கம்

*காணதக அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்*
*நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியஞ் சிவலிங்கம்*
*நாணாது நெடியமால் நான் முகனுங் காண நடுச்*
*சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தா ராய்* [95]

என்று பிரமன் மூலக்கனலிலிருந்து பலகை வடிவாகிய லிங்கம் உற்பத்தியானது இச்சருக்கத்தில் கூறப்படுகிறது.

## தொண்டைமான் திருப்பணி மான்மியம்

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்து வந்த தொண்டைமான், தன்னுடைய நாட்டில் உள்ள குறும்பர்களை அழித்தான். அவ்வமயம் வடகீழ்த்திசையிலிருந்த. வாணன், ஓணன் என்னும் குறுநில மன்னர்கள் இவனுடன் எதிர்த்துப் போராட, தொண்டைமானுடைய சேனைகள் அவர்களுடைய சேனைகளைச் சின்னாபின்னப்படுத்த. அவர்கள் தோல்வியுற்று ஓடிப் போய்க் கோட்டைக்குள்ளிருந்த பைரவமூர்த்தியைத் தியானித்து, ஒரு பூதத்தையுண்டாக்கினர். அது தொண்டைமானுடைய படைகளை வாரிவாரி யுண்டதனால் தொண்டைமானுடைய சேனைகள் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தன.

தொண்டைமான் நடுக்குற்று வேங்கட மலையையடைந்து விஷ்ணு மூர்த்தியை நோக்கி ஐம்புலனை அடக்கி மோனமுற்றுத் தவமியற்றினன். தவப்பயனாக விட்டுணு சக்கரப்படையை அளித்து மறைந்தருளினார். சக்கரப்படையால் அசுரர்களை வெல்ல முடியாது போகவே துன்புற்று,

திருவொற்றியூரையடைந்து அங்கு பெருந்தவ மாற்றிக் கொண்டிருக்கும் உரோம முனிவர் திருவடியிற்பணிந்து தமது குறையை அவரிடம் சொன்னார்.

அதைக்கேட்ட உரோம முனிவர் மனங்கசிந்து படம்பக்க நாதரைப் பணிந்து சிறிது போது அவரை மனத்தில் எண்ணி அவருடைய திருவருளைத் தாங்கி அச்சந்பூதானத்திலிருந்த ஒரு தருப்பைப் புல்லையெடுத்து மழுவாயுதமாகப் பாவித்துத் வெல்லாயாக என்று அருள் செய்தார்.

முன்னம் போல அப்பூதம் வந்து அட்டகாசஞ் செய்யவும், அரசன் தருப்பையை அதன்மீது ஏவினன்; அது மழுவாகச் சென்றபோது பூதம் அதைக் கண்டு பயந்து, இதை நாம் வெல்ல முடியாது என்று ஓடி மறைந்தது. அரசனைத் தருப்பையாகிய மழுவாயுதமானது கொன்றுவிட்டது. உடனே தொண்டைமான் வெற்றி முரசறைந்து அவர்களுடைய கோட்டைகளைத் தன் வயமாக்கிக் கொண்டனன்.

தொண்டைமான்[96] மீண்டும் திருவொற்றியூரை யடைந்து உரோம முனிவரைத் தரிசித்துப் பணிந்து, இனி நான் செய்ய வேண்டும் பணி யாது என்று வினவினன் அதற்கு முனிவர், 'இவ்வாலயத்திற்குத் திருமதில் மண்டபம், கோபுரம் முதலானவற்றைக் கட்டுவித்துத் திருவிழாவும் செய்வாயாக என்று கட்டளையிட்டனர்.

உரோம முனிவரின் வேண்டுகோளை ஏற்று. காஞ்சி மாநகரை அடைந்து மாநகரடைந்து ஐநூறு சிவலிங்கங்களைக் கொண்டு வந்து திருவெற்றியூரில் குடியேற்றினான், திருப்பணி செய்து முடித்து அவ்வாலயத்திற்குத் காவலாக வீரகாளியையும், அவளுடைய மந்திர சக்கரத்தின் தாபிதமாகிய ஒர வட்டப்பாறையையும் ஏற்படுத்தினான்.

பிரமாணர்களுக்கு பொருளனைத்தும் விளங்குமாறு உபதேசித் தருளும் மூர்த்தியாகிய பரமசிவத்தையும், தியாகராசருடைய திருக்கோவிலுக்கு மேற்புறத்தில் தாபித்து எழுகாளிக்கும், பைரவர்கட்கும், மற்றை யோர்கட்கும் வரிசைப்படி ஆலயங்களையமைத்தான்.

ஊர்களையும் அங்கு வேண்டிய வளங்களையும் வகுத்து, பலதீர்த் தங்களையும் புதுப்பித்து, மாசி மகநட்சத்திரத்தில் சமுத்திர தீர்த்தம் முதலான உற்சவங்களை வகுத்து, அவற்றைச் சிவாச்சாரியரைக் கொண்டு நடத்தி உரோம முனிவரைப் பூசித்துப் பல நாட்கள் அவருக்குத் தொண்டு புரிந்து காஞ்சியையடைந்து இனிது அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.[97]

## இலவன் கேள்விச் சருக்கம்

பிரமனிடத்தில் திருவொற்றியூர்ச் சிறப்புகளைக் கேட்டு இனிதுணர்ந்திருந்த நாரதர் ஒருநாள், அயோத்தியை யடைந்து இராமபிரானின் புதல்வனாகிய இலவனைக் கண்டார். நாரதரின் திருவடியில் நன்கு பணிந்து, தனது சிம்மாதனத்தமர்த்தி. 'முனிவா! நான் பிரமபதவியை அடைய விரும்புவதால் அதன் பொருட்டுச் செய்யத்தக்க செயல் யாது? என்று வேண்ட, அதற்கு நாரதர் அனைத்தினுஞ் சிறந்த இராசூய யாகமே சிறந்தது, அதைத் திருவொற்றியூர் என்னும் திவ்யதலத்திற் செய்வையேல் இனிது நிறைவேறும் என்றருளி மறைந்தனர்.

திருவொற்றியூரையடைந்து யாகம் செய்வதற்குரிய நல்ல நாளை எதிர்பார்த்துக் கொண்டு அங்கு சில நாட்கள் வாழ்ந்து வந்தனன் இலவன். ஒரு நாளைக்கு முகூர்த்தம் பதினாறு உதயாதி முதல் ஏழு முகூர்த்தங்களைக் கழிந்து, எட்டாவது முகூர்த்தமே பிரதோட காலமாகும். பிரதோட காலமே இராச சூய யாகத்திற்கு நல்ல காலம் என்று தீர்மானித்துக் கொண்டு,

காஞ்சியை விட்டுத் திருவொற்றியூருக்குப் புறப்படும் போது, இலவனது அன்பை வெளிப்படுத்துதற் தொடங்கியது.

மழை மிகுதியால் வெள்ளம் திரண்டது, வழியே தெரியாமல் தடுமாறும்படி நேரிட்டது. பிரதோட காலம் நெருங்கியது, மழையோ சிறிதும் விடவில்லை. பிரதோட காலத்தைக் கடந்து திருவொற்றியூருக்குச் செல்வதை விட இறத்தலே நலம் என்று துணிந்து இலவன் தன்னுடைய வாளால் தன் கழுத்தை வெட்டிக் கொள்ள முயன்றான். கருணைக் கடலாகிய திருவொற்றியூரர் அருள் மேலீட்டால் இடப வாகனாரூடராய் இலவனுக்கு அவ்விடத்திலேயே காட்சி கொடுத்தருளினர். இலவன், 'இன்றுமுதல் இவ்விடம்' இலவனார் போறூர்' என வழங்கி வரல் வேண்டும் என வேண்ட, அவ்வாறே அருளினார் ஈசர். இவ்விடம் சென்னையிலிருந்து பூவிருந்தவல்லிக்குப் போகும் வழியில் உள்ள போரூர் ஆகும்.

பின்னர், இலவன் அங்கிருந்து திருவொற்றியூரை அடைந்து தீர்த்தமாடிப் படம்பக்க நாதரையும் வடிவுடையம்மையையும் பணிந்து போற்றி, பிரதோஷ காலத்தில் அங்கு இராசசூய யாகத்தைச் செய்து நிறைவேற்றிப் பலவித வரங்களைப் பெற்றார்.[98]

## எழுத்தறியும் பெருமான் சருக்கம்

கிருதயுகத்தில் அரசாண்டு வந்த மாந்தாதா என்னும் மன்னன் வஞ்சனையாற் பொருள் தேடாதவன்; உண்மையை நாடுபவன், அரசு விதிப்படி உலகையாள்பவன். தலபுராணம், கூறும் மாந்தாதா வரலாறு ஏற்கனவே பெரியபுராணத்தில் ஒற்றியூர் பாடப்பட்ட தன்மையைச் சுட்டிக் காட்டும் போது கூறப்பட்டதாகையால் இங்கு கூறப்படவில்லை.

## தியாகேசர் சருக்கம்

ஆடகபுரியிலிருந்து, அந்தணர் குலத்திற் சிறந்த இரண்டு வைதீக சைவர்கள், வடமொழியில் இரண்டு பதிகங்களைப் பாடிக் கொண்டு. சிவலோகமாகிய திருவொற்றியூர் வந்தடைந்தனர் இவர்கள் ஆட்கேசுரப் பெருமானுக்குச் செய்த இரத்தின மாலைக்கு நடுநாயகமணி கிடைக்கப் பெறாமையால் சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டிருந்த போது திருவொற்றியூருக்குச் சென்றால் நடுநாயகமணி கிடைக்கும் என்ற அசரீரி எழுந்தது. அது காரணமாக இவர்கள் திருவொற்றியூர் வந்தடைந்தனர்.

இச்செய்தியறிந்த ஊரார் பின் செல்லத் திருவொற்றியூர் படம்பக்க நாதர் சந்நிதியில் வடமொழிப் பதிகங்களை எடுத்துப் பாட, இசைக்கு மகிழ்ந்து இறைவர் சிவச் சின்னங்களை அணிந்த சிவத் தொண்டராய் எழுந்தருளி வந்து, அவர்கள் விரும்பிய இரத்தினமணியைத் தேடிக் கொடுப்பதாகக் கூறிக் திருமயிலைக்கு அழைத்துச் சென்று, இரத்தின வணிகராகிய ஏலேல சிங்கரிடம் நடந்தவற்றைச் சிந்தித்த நிலையில் இஃது திருவருள் விளையாட்டென எண்ணிக் கொண்டு மனைக்குள் சென்றார்.

இச்செய்தியறிந்த சிலர், மன்னனிடம் சென்று, தங்களுக்கென்று வைத்திருந்த விலைமதிக்க முடியாத இரத்தினத்தை ஏலேல சிங்கர் ஒரு அந்தணருக்குச் கொடுத்து விட்டதாகக் கூற, அரசன் சினத்துடன் செட்டியாரை அழைப்பித்து உண்மையை வினவ. அதற்குச் செட்டியார் இரத்தினம் தயாராய் இருக்கின்றது, இன்று நல்ல நாள் அல்லாமயால் கொண்டு வரவில்லை நாளைக்குக் கொண்டு வந்து கொடுப்பேன் என்று வாக்களித்தார். மன்னன் சினந்தணிந்து செட்டியாரை வீட்டிற்கு அனுப்பி வைத்தனன். சிவநினைவிலேயே இருந்த செட்டியாரைத் திடீரென ஏவலர்கள் வந்து கொண்டு போய் மன்னன் முன்பு நிறுத்தினர்.

மன்னன், மிகுந்த போபம் கொண்டு “ இரத்தினம் எங்கே என்றான். அதற்குச் செட்டியார் ஏவலாளர்கள் என்னை இங்குக் கொண்டு வந்து விட்டார்கள் என்றார். அப்பெட்டியை ஏவலாள் மூலம் அங்கு வரவழைக்க, செட்டியார். கருணைக் கடலாகிய சிவமெருமானது தியானத்துடனே பெட்டியைத் திறந்தார். அப்பெட்டியில் ஒரு பை நிறைய மாணிக்கங்கள் இருந்தன. திருவொற்றியூர் இறைவர் அருளால் செட்டியாருக்கு மாணிக்கங்கள் கிடைத்தமையால் இவ்வூர் இறைவருக்கு மாணிக்கத் தியாகர் என்ற சிறப்புப் பெயருடன் போற்றித் துதிக்கப்பட்டு வருகிறார்.

இவ்வாறு திருவெற்றியூர்த் தலபுராணம் திருவொற்றியூர் ஈசனின் பெருமைகளை எடுத்துரைக்கின்றது.

இராமநாதபுரம் பிள்ளையின் திருவொற்றியூர் தலபுராண உரைநடையில் பதினைந்து சருக்கங்களுக்கு மேல் ஆறு சருக்கங்கள் இணைக்கப் பட்டுள்ளன. திருவொற்றியூர் சிறப்பு, பட்டினத்துப் பிள்ளையார், வாகீசமுனிவர், இராமலிங்கர், திருவொற்றியூர் அடிமை, மறைமலையடிகள் ஆகியோரின் வரலாறுகளை சேர்க்கப்பட்டுள்ளன என்பது இவண் குறிப்பிடத்தக்கது இக்காலத்தவர் வரலாறும் தலபுராணத்தில் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு புதுமையாகும்.

## திருவருட்பாவில் திருவொற்றியூர்

திருவருட்பா, ஆறு திருமுறைகளாக முந்நூற்றுத் தொண்ணுற்றொன்பது பதிகங்களைக் கொண்டு ஐயாயிரத்து எண்ணுற்றுப பதினெட்டுப் பாடல்களைக் கொண்டிலங்குகின்றது. இறைவனை முன்னிறுத்தி மேற்சொன்ன எண்ணிக்கையுடைய பாடல்களைப் பாடிய ஒரே புலவன், ஒரேதுறவி, ஒரே ஞானி வள்ளலார் என்பது குறிப்பிடத்தக்கது[99] கருவிலே திருவுடையராகிய இவர் பன்னிரண்டாவது அகவையிலிருந்து 30

ஆம் அகவைவரை இருபத்து மூன்று ஆண்டுகள் நாடோறும் நடந்து சென்று வழிபாடு நிகழ்த்தியவர். வள்ளலார் 72 பதிகங்களைப் பாடியுள்ளார்.

## திருவான்மியூர்

தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்கள் 32. இவற்றுள் திருவான்மியூர் 25ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.[100]

சென்னை நகரின் தென் பகுதியில் கடற்கரைச்சாலையை ஒட்டியவாறு திருவான்மியூர் விளங்குகின்றது. இப்பகுதி வருவாய்த்துறை ஆவணங்களில் 140ஆவது சுதோத்திரிய கிராமம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக திருவான்மியூரைச் சுற்றித் தகவல் தொடர்பு, கணினி மையங்கள், சிறுதொழில் மையங்கள், குடியிருப்புகள் கல்வி நிறுவனங்கள் ஆகியன தோன்றியுள்ளமையால் இப்பகுதி நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது.[101]

ஊரின் மையத்தில் உடல் நோய்களையும், மனப்பினிமையும் நீக்கும் நல் மருத்துவராகத்திருவான்மியூர் மருந்தீசுவரர் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலின் கருவறையில் நோய் களைத்தீர்க்கவல்ல சக்தி உயர்ந்த யந்திரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதால் மிகக் கொடிய சரும நோய்களையும் நீக்கும் பரிகாரத்தலமாகவும் விளங்குகிறது.[102]

***மூர்த்தி தலத் தீர்த்தங்கள் முறையாகவே நாடிச்***
***சீர்த்தியுற கலங்காங்கே சிவலிங்கம் பெம்மானைக்***
***கீர்த்தி பெறப் பூசித்தார் கேண்மையினைக் கொண்டவருந்***
***தீர்த்தரெனத் திருத்து ரெனாத் தெய்வமறைச்***
***சாலுமென்றார்***[103]

எந்த இடத்தில் "நானிங்கு இருக்கின்றேன்" என்று அசரீரி தோன்றுகிறதோ அங்கு சிவபூசை செய்யுமாறு வழிகாட்டினர். அவ்வாறே வான்மீகரும் தலயாத்திரையைத் துவங்கினார். பாலாற்றிற்கு மேற்கில் கிழக்கிக் கடற்கரையருகேயுள்ள பகுதியில் அசரீரி ஒலித்தது. அவ்விடத்தில் வன்னி மரத்தடியில் 'வேதபுரிவானை' வான்மீகர் கண்டு ஆனந்தக் கூத்தாடினார்.

*கலியாண சுந்தர நக்கவித்தா மந்தோளனி முக்கண்ணா போற்றி*
*வலிவாய கொடிய விடமணி பிடற்றியேர்ந்த வரனே போற்றி*
*பொலிபலவாங் குண்டலிக வாபரண மாயினப் பூண்டாய் போற்றி*
*மயியுமுன் பதத்தன் பரிதயத்தி லெஞ்ஞான்றும் வாழ்வாழ் போற்றி* [104]

என்று வான்மீகர் தோத்திரம் செய்தார். "இறைவா! அடியேனில் பாவங்களை நீங்கி இத்தலம் என் பெயரால் வழங்கப்பட வேண்டும். தங்களது சிரசிலுள்ள கங்கையிலிருந்து சிந்தும் நீர்த்துளிகள் இங்கு புண்ணிய தீர்த்தங்களாக உருவாக வேண்டும்" என வரம் வேண்டினார்.

விரிசடைக் கடவுளின் சிரசிலிருந்து சிந்திய கங்கை நீர்த்துளிகள் கிழக்கில் ஜென்மநாசினி, தெற்கில் காமநாசினி, மேற்கில் பாபநாசினி, வடக்கில் ஞானதாயினி, நடுவில் மோட்சதாயினி ஆகிய பெயர்களால் ஐந்து தீர்த்தங்களாக உருவெடுத்தன.[105]

சென்னையின் வட எல்லையில் அமைந்துள்ள திருவொற்றியூர் மீது எழுதப்பட்டுள்ள தலபுராணத்தில் வான்மீகர் நித்தியத்துவம் பெற்ற சருக்கத்தில் இவ்வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது.[106]

**காலம்**

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே இக்கோயில் இருந்திருக்கவும் வாய்ப்புள்ளது.[107]

தேவாரப் பதிகங்களில் திருவான்மியூரில் பல சிறப்பியல்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சிவபெருமானின் உருவமைப்பு அவர் புரிந்த வீரச் செயல்கள் ஆகியவற்றைத் திருவான்மியூர் ஈசருடன் தொடர்புபடுத்தி அவரது அருள் தன்மைகளை மட்டும் வெளிப்படுத்துமாறு இப்பதிகங்கள் அமைந்துள்ளன. திருவான்மியூர் கோயில் பற்றியும் அதன் அமைப்புப் பற்றியும் எவ்வித தகவல்களும் இப்பதிகங்களில் குறிப்பிடப்படவில்லை. பல்லவர்களின் காலத்தில் திருவான்மியூர் கோயில் பற்றிய வரலாற்றுச் செய்திகள் எனவும் கிடைக்கவில்லை.[108]

## சோழர் காலம்

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலய சோழனால் தோற்றுவிக்கப்பட்ட சோழ சாம்ராஜ்ஜியம் நான்கு நூற்றாண்டுகளுக்குத் தமிழகத்தில் தனது முத்திரையைப் பதித்தது. பழைய ஆலயங்கள் புத்துயிர் பெற்றன. புதிய கோயில்கள் உருவாயின.[109]

சோழர்களின் ஆட்சிக் காலத்தில் தோன்றிய ஏழு கல்வெட்டுக்கள் திருவான்மியூர் கோயிலில் திரிபுரசுந்தரி அம்மன் கருவறையின் புறச் சுவர்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது. பரகேசரிவர்மன் எனப்படும் உடையார் ஸ்ரீராஜேந்திர தேவனின் (கி.பி.1011–43) ஆறாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டது.

கிழக்குச் சுவரில் உள்ள இக்கல்வெட்டு திருவான்மியூர் மகாதேவர் கோயிவில் மாலை தொடுப்பதற்காகக் கொடை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது. இந்த அரசனின் பதினான்காவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு திருவான்மியூர் மகாதேவர் ஆலயத்தில் விளக்கெரிப்பதற்காக ஆடுகள் கொடையளிக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் உட்பிரிவான புலியூர்க் கோட்டத்தில் உள்ள கோட்டூர் நாட்டில் தேவ தானமாகத் திருவான்மியூர் விளங்கியதாக அறிய முடிகிறது. இந்த அரசனின் மற்றொரு கல்வெட்டு மூலம் திருவான்மியூர் மகாதேவர் ஆலயத்தில் வழிபாடு, காணிக்கை ஆகியவற்றிற்காகப் பொன்னும் நெல்லும் தானமாக வழங்கப்பட்டதாக அறிய முடிகிறது. இந்த அரசனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த வேறு இரு கல்வெட்டுக்கள் மிகவும் சிதைந்துள்ளதால் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அம்மன் கருவறையின் மேற்குச் சுவரிலுள்ள கல்வெட்டு உடையார் ஸ்ரீஇராஜாதிராஜ தேவரின் (கி.பி.1018–1052) இருபத்தேழாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. திருவான்மியூர் மகாதேவர் கோயிலுக்கு நிலதானம் வழங்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இக்கருவறையின் கிழக்குச் சுவரில் பரகேசரிவர்மன் எனப்படும் உடையார் இராஜேந்திர தேவரின் (கி.பி.1058–1063) பதினொன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது.

சென்னை மாநகரில் அமைந்துள்ள வேறு சில ஆலயங்களில் (மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலை காரணீஸ்வரர் ஆலயம், மயிலை விருபாட்சீசுவரர் ஆலயம், மயிலை வாலீஸ்வரர் ஆலயம், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயம், புரசைவாக்கம் கங்காதிரேஸ்வரர் ஆலயம், வேளச்சேரி தண்டீஸ்வரர் ஆலயம்) திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும் சில கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

இவற்றுள் பெரும்பாலானவை கி.பி.பன்னிரெண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனத் தமிழக அரசின்

தொல்லியல் துறையினர் நிர்ணயித்துள்ளனர். மயிலை விருபாட்டீசுவரர் திருக்கோயில் (கி.பி.1063–69) ஆட்சியில் எழுதப்பட்ட கல்வெட்டு உள்ளது. அதில் திருவான்மியூர் உலகாளுடைய நாயனாருக்குக் குமாரந்தை தேவன் என்பவன் இரண்டு ஆடுகளை வழங்கிய செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.[110]

## கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

மயிலை காரணீஸ்வரர் கோயிலில் உள்ள விக்கிரம சோழனின் (கி.பி.1115–1135) கல்வெட்டு மூலம் திருவான்மியூர் உடையாருக்குத் திருநந்தா விளக்கெரிக்கச் சில பிராமணர்கள் கொடை வழங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டாம் இராஜராஜனின் (கி.பி.1146–73) ஆட்சிக் காலத்தில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சேர்ந்த செம்பூங் கோட்டத்திலுள்ள ஜெயங் கொண்ட சோழ நல்லூரைச் சேர்ந்த நெய்தல் வாயிலுடையான் ஒற்றி வாமன தேவன் மலையப்பிராஜன் என்பவன் புலியூர்க் கோட்ட ஆளுடையார் திருவான்மியூர் மருந்தாண்டவர்க்கு ஒரு நந்தா விளக்கு ஏற்றுவதற்கு 32 பசுக்களையும் ஒரு காளையையும் வழங்கினான். இத்தகவலையளிக்கும் கல்வெட்டு மயிலை வாலீஸ்வரர் கோயில் கருவறையில் லடக்குச் சுவரிலுள்ளது.

கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் வேறு சில கல்வெட்டுக்கள் இக்கோயில்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றில் அரசனின் பெயரோ ஆட்சியாண்டோ குறிப்பிடப்படவில்லை. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயிலில் உட்சுவற்றில் வடப்புறம் தரையில் உள்ள கல்வெட்டு பசு கொடையளிக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

## பதின்மூன்றாம் நூற்றாண்டு

மூன்றாம் குலோத்துங்கனின் (1178–1218) ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு மயிலை காரணீஸ்வரர் கோயிலில் மகா மண்டலச் சுவரில் உள்ளது.

இக்கல்வெட்டு மூலம் சோழ மன்னர்களின் ஆட்சியில் (கி.பி. பத்து முதல் பதின்மூன்று நூற்றாண்டுகள் வரை) திருவான்மியூர் முக்கிய வழிபாட்டுத் தலமாக இருந்துள்ளது.[111]

திருவான்மியூர் ஆலயம் பற்றிய தகவல்களையளிக்கும் கல்வெட்டுக்களுள் காலத்தால் முந்தியவை முதலாம் இராஜேந்திரசோழன் ஆட்சியில் தோன்றியவை. செங்கற்களால் முதலில் கட்டப்பட்ட இக்கோயில் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கருங்கற்களால் உருவாக்கப் பட்டிருக்கலாம் என்ற கருத்து வெளிப்படுகிறது.

முதலாம் இராஜேந்திரன் தனது ஆட்சியின் இறுதியில் தீராத நோயால் பீடிக்கப்படாதாகவும் அதனை நீக்குவதற்காகத் திருவான்மியூரில் வழிபட்டு நலம் பெற்றதாகவும் ஒரு செவிவழிச் செய்தி வழக்கிலுள்ளது.[112]

திருவான்மியூர் ஆலயத்தில் உள்ள பதினொன்றாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் அம்மன் சந்நிதியில் இடம் பெற்றுள்ளன. இவற்றில் அம்மன் பற்றியக் குறிப்பு எதுவும் இல்லை. பிற்காலத்தில் ஆலயம் புதுப்பிக்கப்பட்ட போது சந்நிதிகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம். அல்லது, ஒரு இடத்தில் பெயர்த்தெடுக்கப்பட்டவை வேறு பகுதிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஒரே காலத்தில் பல கோயில்களில் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்ட போது திருவான்மியூர் ஆலயத்தில் இருந்த கற்கள் பிற கோயில்களில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். சென்னையிலுள்ள பிற கோயில்களிலும்

திருவான்மியூர் பற்றிய கல்வெட்டுக்கள் இடம் பெற்றதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்[113] என்று எண்ண இடமளிக்கிறது.

## ஆங்கிலேயர் காலம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (கி.பி.1839–1898) பாம்பன் குமர குருதாச சுவாமிகள் (1850–1929) ஆகியோர் திருவான்மியூர் ஆலயம் மீது பதிகங்களை இயற்றினர். அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தரமுதலியார் திருவான்மியூர் தல புராணத்தை இயற்றினார்.

இருபதாம் நூற்றாண்டில் இவ்வாலயத்திற்கு அளிக்கப்பட்ட கொடைகளை விவரிக்கும் ஐந்து கல்வெட்டுக்கள் திரிபுரசுந்தரி அம்மனின் சந்நிதி வெளி மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.[114]

## திருக்கோயில் அமைப்பு

திருவான்மியூர் ஆலயத்தின் கிழக்கு வாயில் மீது அழகிய ஏழு நிலை இராஜகோபுரம் அமைந்துள்ளது. 1963 இல் துவங்கப்பட்ட இக்கோபுரம் நிறைவுறாமல் மொட்டை கோபுரமாகவே இருந்தது. 2007 ஆம் ஆண்டில் இதனை நிறைவு செய்து மதிற்சுவரை எழுப்பிப் புதிய பிரகாரத்தை உருவாக்கினர். அடுத்து ஐந்து நிலை கோபுரத்துடன் கூடிய இரண்டாவது வாயில் உள்ளது. முற்றுப் பெறாத ராயர் கோபுரத்துடன் விளங்கிய இவ்வாயில் மீது 1924 ஆம் ஆண்டில் கோபுரத்தை எழுப்பினர். 2008 ஆம் ஆண்டு வரை இந்த கோபுரமே பிரதான வாயிலாக விளங்கி வந்தது.[115]

## பலிபீடம் கொடிமரம், நந்தி

பொதுவாக சிவாலயத்தின் கருவறையில் சிவலிங்கமும் அதன் முன்பு நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியனவும் ஒரே வரிசையில் நிறுவப்பட

வேண்டும் என்று கூறுவர். சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகியன சைவர்கள் போற்றும் முப்பெரும் உண்மைகளான பதி (ஈசன்), பசு (உயிர்), பாசம் (கூட்டு) ஆகியவற்றைக் குறிப்பதாகத் திருமூலர் கூறுகிறார்.

*ஆயபதிதான் அருட் சிவலிங்கமாம்*
*ஆய பசுவும் அடலேறு என நிற்கும்*
*ஆய பலிபீடம் ஆகுநற்பாசமாம்* [116]

இவ்வரிசையில் முதலில் கொடிமரம் உள்ளது. இதன் கால் பாகம் சதுரமான அடிப்பாகத்தின் மீது உயரமான எட்டு கோண மேடையால் சூழப்பட்டுள்ளது. குறித்துள்ள இதன் மேல் பாகத்தில் இரண்டு உபதண்டங்களும், மூன்று பலகைகளும் பொருத்தப்பட்டுள்ளன. கொடிமரம் உறுதியாக இருக்கவும் கொடியேற்றும் போது பிடிப்பாக விளங்கவும் இவை அமைக்கப்பட்டுள்ளன.[117]

## 108 சிவலிங்கங்கள்

நடராஜ சபையை அடுத்துள்ள பகுதியில் நூற்றெட்டு சிவலிங்கங்கள் இடம் பெற்றுள்ளன. இவை பன்னிரண்டு வரிசைகளில் வரிசைக்கு ஒன்பது என்ற விகிதத்தில் அமைந்துள்ளன. ஒவ்வொரு வரிசையிலும் நடுவிலுள்ள சிவலிங்கங்கள் மட்டும் சற்று பெரிதாக உள்ளன.[118]

## தல விநாயகர்

அருணகிரிநாதர் இத்தலம் வரும் போது அவருக்கு வழி காட்டிய பெருமை திருமுடி விநாயகருக்கே உரியது. திப்பு சுல்தான் இவரை வாளால் வெட்டியதாகவும் அவ்வெட்டுத் தழும்புகள் விநாயகரின் மேனியில் உள்ளதாகவும் கூறுவர்.[119]

## புண்ணிய தீர்த்தங்கள்

வான்மீக முனிவருக்கு அருள் புரிந்த போது அவரது சடையிலுள்ள கங்கை நீர்த்துளிகள் சிந்தி ஐந்து தீர்த்தங்களாக உருவெடுத்ததாகத் தல வரலாறு கூறுகிறது. இவற்றுள் கிழக்கிலுள்ள ஜென்ம நாசனி இரட்சசு, இந்திரன் ஆகியோருக்குச் சாபவிமோசனம் அளித்தது. இன்று சித்திரைத் திருக்குளம் என்ற பெயருடன் இரண்டாம் கோபுரத்திற்கு அருகே காட்சியளிக்கிறது. [120]

சந்திரனுக்கு நல்வாழ்வளித்த காமநாசனி தெற்கில் உள்ளது. இது இன்று ஆலய மடைப்பள்ளியில் கிணறு வடிவில் காட்சியளிக்கிறது. பார்த்தசாரதி பெருமாள் அருள் பெற வழிகாட்டிய பாபநாசனி ஆலயத்திற்கு வெளியேயுள்ள உள்ளது பெரிய திருக்குளமாகும். வடக்கிலுள்ள தீர்த்தம் ஞானதாயினி எனப்படும். மேற்கு வாயிலுக்கு எதிராக மங்கல ஏரி என்ற பெயருடன் விளங்கிய இத்தீர்த்தம் சில ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்டது.

இவற்றிற்கு நடுவிலுள்ள தீர்த்தமே மோட்சதாயினி, ஆலயத்தில் நாலு கால் மண்டபத்திற்கருகே கிணறு வடிவில் காட்சியளித்த இத்தீர்த்தம் தற்போது உபயோகத்தில் இல்லை. இவை தவிர சூரிய தீர்த்தம், யம தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் ஆகிய புனித நீர் நிலைகளைத் தலபுராணம் குறிப்பிடுகிறது.[121]

## தல விருட்சம்

திருவான்மியூர் ஆலயத்தின் வடமேற்கு மூலையில் தழைத்து வளர்ந்துள்ள வன்னி மரமே தலவிருட்சமாகும். இதனை கொன்றை எனவும் அழைப்பர்.[122]

**கலைச் சிறப்பு**

திருவான்மியூர் திருக்கோயில் முழுக்க திராவிடக் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. பல்லவர்களின் காலத்தில் மூலக்கருவறையுடன் கூடிய சிறிய கோயிலாக விளங்கிய இவ்வாலயம் சோழர்களின் காலத்தில் அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றைப் பெற்று வளர்ச்சியுற்றிருக்கக் கூடும். கிழக்குக் கோபுர வாயிலின் இரு புறங்களிலும் உள்ள ஜோடனைகள் கருவறையின் வெளிப்புறத்திலுள்ள கோஷ்ட பஞ்சரங்கள், விமானத்திலுள்ள கூடுகளில் இடம் பெற்றுள்ள சிம்மத் தலையுடன் கூடிய மனித முகங்கள் ஆகியன சோழர் கலைப் பாணிக்குச் சான்று பகர்வனவாகச் சில ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அம்மன் சந்நிதி வெளி மண்டபத்திலுள்ள தூண்கள் விஜய நகர அரசின் கலைப் பாணியில் அமைந்துள்ளன. மிகவும் சிதைந்திருந்த ஆலயத்தைச் செப்பனிடவே மூலவர் தவிர மற்ற தெய்வ உருவங்களை ஆலய அறங்காவலர்களாக விளங்கிய திருப்பாசூர் செட்டியார் குடும்பத்தினர் அமைத்ததாக ஆலய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. காலம் காலமாக இவ்வாலயம் பல மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளது. இக்கோயிலின் கலைப்பாணியும் இந்த வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்றது.[123]

**கருவறை**

சுவர்களுக்கிடையே உள்ள இடைப்பகுதியை மூடியவாறு சுவர் மீது பொருந்தி நிற்கும் கூரைப்பகுதி கூரை எனப்படும். இதனையடுத்துள்ள கழுத்துப் பகுதி கிரீவம் எனப்படும். சாலை, குடம், கூடு, கொடுங்கை, யாளிவரி போன்ற சிறு உறுப்புக்கள் இப்பகுதிக்கு அழகூட்டுகின்றன. இதனையடுத்து தலைப்பகுதியான சிகரம் உள்ளது. சிரத்திற்கு மேல் குடம் போலவும், அதன் மீது குவிந்த தாமரை போலவும் அமைந்துள்ள பகுதியே

ஸ்தூபி எனப்படும் கலசமாகும். திருவான்மியூர் கோயிலில் உள்ள கருவறை இத்தகைய உறுப்புக்களுடன் முறைப்படி அமைந்துள்ளது.[124]

## மண்டபங்கள்

மருந்தீசுவரர் கருவறை ஒரு பெரிய மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ளது. கருவறையை வலம் வருவதற்கான பாதையுடன் இம்மண்டபம் விளங்குகிறது. இம்மண்டபத்தின் முன் பகுதியில் 26 தூண்களும் பின் பகுதியில் 25 தூண்களும் உள்ளன. இம்மண்டபத்தை யடுத்துள்ள தியாகராஜர் மண்டபத்தை 34 தூண்கள் தாங்குகின்றன.

திரிபுர சுந்தரி சந்நிதி முன் மண்டபம் பதினெட்டு தூண்களால் தாங்கப்படுகிறது. அம்மன் சந்நிதி மண்டபம் 28 தூண்கள் பெற்றுள்ளது.[125]

## கோபுரங்கள்

கிழக்கு, மேற்கு வாயில்களின் மீது ஐந்து நிலைகளும் ஏழு கலசங்களும் உடைய கோபுரங்கள் உள்ளன. கோபுரத்தைக் காணும் போது அதன் கீழ்ப்பகுதி அகலமாகத் தென்படும். உயர்ந்து செல்லும் பகுதியின் அகலம் இரு பக்கங்களிலும் குறைந்தவாறு கோபுரம் மேல் நோக்கிச் செல்வதும் தெளிவாகத் தெரியும் விமானங்களில் உள்ள வேலைப்பாடுகள் கோபுரத்திலும் உள்ளன.

கோபுரத்தில் முன் பக்கமும் பின் பக்கமும் வலப்புறம் இடப்புறம் ஆகியவற்றை விட அகன்றுள்ளன. முன், பின் பக்கங்களில் சாளரங்கள் அமைந்துள்ளன. இவற்றை நிலைகள் அல்லது மாடங்கள் என அழைப்பர். கோபுரத்தின் முக்கிய உறுப்புக்கள் சிவம், ஸ்தூபி, களகூடம், க்ஷத்ரநாசி ஆகியனவாகும்.[126]

*கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்*
*மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்*
*கண்ட சருக்கரையும் பெருகும் என்றிவை*
*பத்தே சிற்பத் தொழிற் குறுப் பாவன* [127]

என்னும் திவாகர நிகண்டுப் பாடல் சிற்பங்களமைக்கப் பயன்படும் பொருட்கள் பற்றித் தெரிவிக்கின்றது. பொதுவாக எல்லா ஆலயங்களைப் போலவே திருவான்மியூர் திருக்கோயிலிலும் மண், சுதை, உலோகம் ஆகியவற்றால் உருவான சிற்பங்களே இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை தெய்வச் சிற்பங்களேயாகும்.

### சுதையுருவங்கள்

கோபுரத்தின் மீது சுதைச் சிற்பங்கள் உள்ளன. அவ்வாறே மூலவர், தியாகராஜர், முருகர், நடராஜர், அம்மன் ஆகிய சந்நிதிகளுக்கு மேலே அமைந்துள்ள விமானங்களிலும் பல சுதைச் சிற்பங்கள் உள்ளன.

திருவான்மியூர் மருந்தீசுவரர் என்னும் திருக்கோயில் விண்ணை முட்டும் அளவிற்கு கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. இக்கோயிலிலுள்ள மூலவர் மருந்தீசுவரர் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றின் பொருளை உணர்த்துமாறு அமைந்துள்ளன.

இக்கோயிலுள்ள சிறப்புகள், முதல் நிலைக் கோயிலாக விளங்கும் திருவான்மியூர் மருந்தீசுவரர் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், திருவான்மியூருக்கு வருகை புரிந்து வழி பட்டுள்ளதால் அவர்களது காலமான கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இவ்வூர் ஒரு சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கியுள்ளது என்பதை அறியலாம்.

இன்றளவும் திருவான்மியூர் மருந்தீசுவரர் திருக்கோயில் கம்பீரமாக காட்சி தருகிறது. இக்கோயில் சீரமைக்கப்பட்டு இருக்கிறது என்பதை இங்கு அமைந்துள்ள பிற்காலக் கல்வெட்டு பெயர்ப் பலகையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இக்கட்டிடம் பிற்காலத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் திராவிட கலைப்பாணி அடிப்படையில் அமைந்துள்ளது என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

கல் சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் கலை நயத்துடன் தோற்றம் அளிக்கின்றன. இராஜகோபுரச் சிற்பங்கள் இந்து புராண வரலாற்றைக் கூறுகின்றது. இத்தலக் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

தென்னகத்தைப் பொறுத்தவரை சைவ வழிபாடு அதிகமாய் காணப்படுகிறது. சைவ சமயத்தை மக்களிடையே பரப்புவதற்கு சைவ மடங்கள் நிறுவியும் திருக்கோயில்கள் கட்டியும் தோத்திரப் பாடல்களைப் பாடியும் சைவத்தை வளர்த்தனர். தல வரலாறும், புராணச் செய்திகளும் மக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதாக முன்னோர்களால் அமைக்கப்பட்டன.

மருந்தீசுவரர் வாழ்க்கை வரலாற்றையும் வழிபாட்டு முறைகளையும் இங்குள்ள கல்வெட்டுக்கள், புராணச்செய்திகள் மூலம் அறிய முடிகின்றது. மருந்தீசுவரர், விநாயகர், பலிபீடம், கொடிமரம், நந்தி, முருகப் பெருமான் வள்ளி, தெய்வயானை, அறுபத்து மூவர், நால்வர், கஜலட்சுமி, முத்துக்குமாரசுவாமி, அம்பலவாணர், காலபைரவர், சூரியன், பஞ்சலிங்கங்கள், பிறைக்கோட்ட தெய்வங்கள் பிரம்மா, மகாவிஷ்ணு, தட்சிணாமூர்த்தி, துர்க்கை, திரிபுரசுந்தரி அம்மன் ஆகியோர் இத்திருத்தலத்தில் தனித்தனியே உள்ளனர்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் இயங்கி வரும் ஏனைய திருக்கோயிலிலும் திருவான்மியூர் மருந்தீசுவரன் திருக்கோயில் தமிழக வரலாற்றுக்கு மருந்தீசுவரர் திருக்கோயின் பங்களிப்பு போன்ற தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை சுட்டிக் காட்டி இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமானால், உலகம் முழுவதும் கோயில்கள் பற்றிய புதிய செய்திகள் வெளிவரும்.

### திருவல்லீஸ்வரர் - திருவலிதாயம்

திருவல்லீஸ்வரர் கோயில் அமைந்துள்ள பாடி என்ற இடம் முற்காலத்தில் தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியாக விளங்கியது. தொண்டை மண்டலம் தமிழக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இத்தலம் பாடி என்று இன்று வழங்கப்படுகிறது. பரத்வாச மகிரிஷி வியாழன், அனுமன் ஆகியோர் வழிபட்ட திருத்தலம்.

| | | |
|---|---|---|
| இறைவன் பெயர் | : | வலிதாயர் |
| அம்மை | : | தாயம்மை |

### கல்வெட்டுகள்

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுகள் 14 உள்ளன.

கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட படி சுவாமியின் பெயர் திருவலிதாய நாயனார்.

அம்மை: திருவீதி நாச்சியார் என்றறிய முடிகிறது. [128]

தமிழில் கிடைத்துள்ள நூல்களுள் காலத்தால் முற்பட்டது. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலாகும். தமிழகம் இருபத்து மூன்று

பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததாகத் தொல்காப்பியம் கூறுகிறது. இவற்றுள் அருவா நாடு, அருவா வடதலை நாடு ஆகிய இரு நாடுகளும் இணைந்து தொண்டை நாடாக உருவானதாக வரலாற்றாசிரியர்கள் கூறுவர். மௌரிய மன்னரான பிம்பிசாரர் இப்பகுதியை வென்றதாகவும் அசோகர் நாட்டின் தெற்கு எல்லையாகத் தொண்டை நாடு விளங்கியதாகவும் கூறுவர்.

கர்னெல் மெக்கன்ஸி என்பவர் கண்டெடுத்த சுவடிகள் மூலம் ஆடு மாடுகளை மேய்க்கும் குறும்பர் என்ற குடியினர் வாழ்ந்து வந்ததால் இப்பகுதி 'குறும்பர்பூமி' எனப் பெயர் பெற்றதாக அறியலாம்.[129]

சங்க காலத்தில் கரிகால் சோழன் குறும்பர்களை வென்று தொண்டை நாட்டைத் தனது நாட்டின் ஒரு பகுதியாக இணைத்தான்.

கரிகால் சோழன் தனது நாட்டின் வடபகுதிக்கு அவன் மகன் ஆடுதொண்டையைச் சக்கரவர்த்தியாக்கினான். ஆதலால் அவன் ஆட்சி புரிந்த பகுதியே தொண்டை நாடாயிற்று. இவ்வரலாற்றைப் படிக்காசு புலவர் இயற்றிய தொண்டை மண்டல சதகம் தெரிவிக்கிறது.

*மந்தாகினிக்கு மகவாகக் கேட்ட வரம் கொடுப்ப*
*மந்தாகினிக்கு மரபான துந் தொண்டை மண்டலமே* [130]

என்பதால் அறியலாம்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய பெரும்பாணாற்றுப்படை என்ற நூல் தொண்டைமான் இளந்திரையன் என்ற அரசனின் புகழைப் பாடுகிறது. கரிகாலனால் தனது நாட்டின் வடபகுதியில் அரசனாக நியமிக்கப்பட்ட ஆடுதொண்டை சக்கரவர்த்தியும் தொண்டைமான் இளந்திரையனும் ஒருவரே என்று பல வரலாற்று அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஔவையார் தொண்டைமான் என்ற அரசரிடம் தூதராகச் சென்று சமாதானத்தை நிலை நிறுத்திய செய்தி சங்க நூலில் காணப்படுகிறது. தற்போது கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு தொண்டைமான் பற்றிய இறுதியான முடிவுக்கு வர முடியவில்லை.

இருப்பினும் இம்மன்னன் பெயரால் தொண்டை நாடு என்ற பெயர் வழங்கப்பட்டது என்பது உறுதி. தொண்டை எனும் கொடி அதிகமாக வளர்ந்திருந்ததால் இப்பகுதி தொண்டை நாடு எனப் பெயர் பெற்றதாகவும் ஒரு கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சங்க காலத்தின் முடிவில் “நாகரீகத்தின் எதிரிகள்” என இகழப்பட்டுள்ள களப்பிரர்கள் என்ற குடியினரால் தமிழக நாகரீக மரபு அழிவுற்றது. இவர்களது ஆட்சி இருண்ட காலமாக விளங்கியது. முற்கால பல்லவர்கள் பற்றிய சாசனங்கள் கிடைத்துள்ள போதிலும் அவை முழுமையான விவரங்களையளிக்கவில்லை. சிம்ம விஷ்ணுவால் கி.பி.560இல் துவக்கப்பட்ட பல்லவர்களின் ஆட்சி முதல் தொண்டை நாட்டின் வரலாறு துவங்குகிறது.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் சமண சமயத்தின் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. சமணத்தின் வீழ்ச்சி சைவ வைணவ சமயங்களின் வளர்ச்சிக்கு மீண்டும் அடிகோலியது. பக்தி இயக்கத்தின் வளர்ச்சி காரணமாக இறை வழிபாடு இறையடியார்கள் வழிபாடு ஆகியனவாயின.

சங்க காலத்தில் எளிதில் அழியக் கூடிய மண், மரம், காரை, செங்கல் போன்ற பொருட்களால் கோயில்கள் எழுப்பப்பட்டதால் அவை காலத்தை வென்று நிலைக்கவில்லை. பல்லவர்கள் காலத்தில் பாறைகள் கருங்கற்கள் ஆகியவற்றால் எழுப்பப்பட்ட கோயில்கள் இன்னும் சில மாறுதல்களுடன் காணப்படுகின்றன.

பிற ஆலயங்கள் போலவே திருவலிதாயம் திருக்கோயிலின் வரலாறும் பல்லவர் காலத்திலிருந்தே துவங்குகின்றது. இக்கோயில் பற்றிக் கிடைத்துள்ள சான்றுகளுள் காலத்தால் முற்பட்டவை திருஞான சம்பந்தர் இயற்றிய தேவாரப் பதிகமாகும்.

*பத்தரொடு பலரும் பொலிய அம்மலர்*
*அங்கைப் புனல் தூவி*
*ஒத்த சொல்லி உலகத்தவர் தாம் தொழுது*
*ஏத்த உயர் சென்னி*
*மத்தம் வைத்த பெருமான் பிரியாது*
*உறைகின்ற வலிதாயம்*
*சித்தம் வைத்த அடியார் அவர் மேல்*
*அடையா மற்று அடர் நோயே* [131]

என்று பாடுகிறார் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் திருவலிதாயத்தின் மீது பாடியுள்ள பதிகத்தில் சிவபெருமானின் உருவமைப்பு தொன்மைகள் ஆகியன சிறப்பிக்கப் பட்டுள்ளன. திருவலிதாயம் திருக்கோயிலின் அமைப்புப் பற்றிய செய்திகள் எதுவும் இடம் பெறவில்லை. அக்காலத்தில் இங்கு லிங்கத் திருமேனியாய் சிறுகோயில் மட்டும் இருந்திருக்கக்கூடும்.

சிம்ம விஷ்ணு துவங்கிய பல்லவ சாம்ராஜ்ஜியத்தில் தொண்டை நாடு இருதயமாக விளங்கியது. இதே சமயம் வாதாபியைத் தலைநகராகக் கொண்ட சாளுக்கிய மரபினர் தெற்கிலுள்ள பகுதிகளைக் கைப்பற்ற முயன்றனர். இதன் விளைவாகப் பல்லவர்களுடன் அடிக்கடி போர்கள் நடைபெற்றன. பல முறை தொண்டை நாடு போர்க்களமாக விளங்கியது.

சாளுக்கியர்களுடனும் பாண்டியர்களுடனும் தொடர்ந்து போரிட்டு வந்த பல்லவ அரசு கி.பி.எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வலிமை

குன்றியது. இவ்வம்சத்தின் கடைசி அரசனான அபராஜிதன் (கி.பி.885–903) சங்க மன்னரின் துணையுடன் தனது ஆட்சியை நிலை நிறுத்தப் போராடி வந்தான்.

இம்மன்னனின் பதினேழாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு திருவலிதாயம் திருக்கோயிலின் வெளிப்பிரகாரத்தில் கிடைத்துள்ளது. பல்லவர் ஆட்சியின் இறுதிக் காலம் வரை இக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகள் பல்லவர்களின் சாம்ராஜ்ஜியத்தில் இடம் பெற்றிருந்ததை இக்கல்வெட்டு உணர்த்துகிறது.[132]

திருவலிதாயம் ஆலயத்தில் வெளிப் பிரகாரத்திலுள்ள கல்லில் பார்த்தியேந்திரவர்மனின் ஆறாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு கிடைத்துள்ளது. 31 வரிகளையுடைய இக்கல்வெட்டில் புழல் கோட்டத்தின் உட்பிரிவான அம்பத்தூர் ஏரி கீழ் நாட்டிலுள்ள பராந்தக சதுர்வேதி மங்கலம் எனப்படும் குறட்டூரைச் சார்ந்த சபை 1350 குழி அல்லது மஞ்சிகம் அளவுடைய நிலத்தை விற்றது. தொன்றலங்கிழான் திருவொற்றியூரான் என்பவன் திருவலிதாய சிவாலயத்தில் நிலத்தை ஒப்படைத்து, நந்தா விளக்கெரிக்க கொடையாக அளித்தான். ஆலய உண்ணாழிகை சபையைச் சேர்ந்த பெருமக்கள் ஆலயத்தில் விளக்கெரியச் செய்யும் பொறுப்பை ஏற்றனர்.[133]

இராஜகேசரிவர்மன் எனப்படும் இம்மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டில் செங்கண்கிழான் திருவேலி காளிபட்டன் என்பவன் திருவலிதாயம் திருக்கோயிலில் ஒரு புதிய சந்நிதியை உருவாக்கினான். அதில் வழிபாடுகள் நடைபெற நெல் தானமளித்தான். இக்கல்வெட்டு சிதைந்துள்ளதால் தகவல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை.

இதே அரசனின் பத்தாம் ஆட்சியாண்டில் விளக்கெரிப்பதற்காகத் தொண்ணூறு ஆடுகள் கொடையாக வழங்கப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டுக்களில் துடமுனி அல்லது துடமுனியூர் நாட்டின் உட்பிரிவான புலியூர் கோட்டத்தில் உள்ள திருவலிதாயில் மகாதேவர் கோயில் என, இவ்வாலயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் இராஜராஜனுக்குப் பின்னர் பல நூற்றாண்டுகள் ஜெயங் கொண்ட சோழ மண்டலம் சோழ நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. இக்காலத்தில் இப்பகுதியிலுள்ள பல கோயில்களுக்குச் சோழ மன்னர்கள் மானியங்கள் அளித்துள்ளனர். ஆனால் திருவலிதாயம் கோயிலில் சோழ வம்சத்தின் கடைசி அரசனான திரிபுவனச்சக்கரவர்த்தி மூன்றாம் இராஜராஜனின் (கி.பி.1218–1256) ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த நான்கு கல்வெட்டுக்கள் மட்டுமே கிடைத்துள்ளன.[134]

மூன்றாம் இராஜராஜனின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருவலிதாயத்தின் புறநகர்ப் பகுதியான சிந்தாமணிபுரத்தில் உள்ள திருவலிதாயமுடைய நாயனார் கோயில் என இவ்வாலயம் வழங்கப்பட்டதாகக் குறிப்பு உள்ளது.

திருவலிதாயத்து ஊர் மக்கள் தங்கள் ஊரில் உள்ள இறையிலி தேவ தானங்கள் நீக்கி, ஊர் முழுவதையும் சர்வ மானியமாக அளித்ததாக அறியலாம். தானியங்களை அளக்கத் திருஞான சம்பந்த நாழி என்ற அளவை பயன்படுத்தப்பட்டதாகவும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் உள்ள விக்கிரம சோழ வள நாட்டில் புழல் கோட்டத்தின் உட்பிரிவான அம்பத்தூர் நாட்டில் அமைந்துள்ள திருவலிதாயத்தில் திருவலிதாயம் உடைய நாயனார் திருக்கோயில் அமைந்திருந்த செய்தியை இக்கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. விக்கிரம

சோழன் ஆட்சிக் காலத்திற்குப் பின்னர் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கலாம்.

அநபாய சோழனின் அமைச்சரான சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் திருஞான சம்பந்தர் திருவலிதாயத்தில் வழிபட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. சோழ மன்னர்கள் காலத்தில் இத்தலம் பெருமையுற்றிருந்தாக அறியலாம். அநபாயன் எனப்படும் அரசன் இரண்டாம் குலோத்துங்க சோழனா? (கி.பி.1133–1150) அல்லது மூன்றாம் குலோத்துங்க சோழனா? (கி.பி.1178–1216) எனத் திட்டவட்டமாகத் தெரியவில்லை.

தெலுங்குச் சோழர்கள் குலத்தைச் சேர்ந்த திரிபுவனச் சக்கரவர்த்தி விஜய கண்ட கோபால தேவனியை மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு திருவலிதாயம் கோயில் முன் மண்டபத்தில் தெற்குச் சுவரில் உள்ளது.

மதுராந்தக பொத்தப்பி சோழனின் முப்பத்து மூன்றாம் ஆட்சியாண்டில் இக்கோயிலைப் புதுப்பிக்கவும் உணவு அளிக்கவும் திருவலிதாயம் கிராமமே கொடையாக வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டுக் கருவறையின் மேற்குச் சுவரில் கிடைத்துள்ளது.[135]

திருவலிதாயம் திருக்கோயிலில் விஜய நகர மன்னர்கள் காலத்தில் அளிக்கப்பட்ட கொடைகளை விவரிக்கும் நான்கு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இரண்டாம் ஹரிஹரராயரின் (கி.பி.1377–1404) ஆட்சிக் காலத்தில் அரசவை பிரதானியான மல்லப்ப உடையார் என்பவர் பாடி திருவலிதாயம் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை நிர்ணயம் செய்தார். இக்கல்வெட்டு தாத்ரி ஆண்டில் (சகம் 1319 கி.பி.1397) பொறிக்கப்பட்டது. விகாரி ஆண்டில் (சகம் 1342 கி.பி.1426) முதலாம்

தேவராஜ மகாராஜன் (கி.பி.1406–1422) காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு மூலம் நுளப்பியாற்று மணங்சேரி எனப்படும் நியாய பரிபாலன் பேட்டை என்ற ஊர் இக்கோயிற்கு விற்கப்பட்டது.

விஜய நகர மன்னரான பிரபு தேவராயரின் (இரண்டாம் தேவராயர் கி.பி.1422–46) சம காலத்தவராகக் கருதப்படும் அருணகிரிநாதர் திருவலிதாயம் சென்று அங்கு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது ஒரு பாடலைப் பாடியுள்ளார். அருணகிரிநாதரின் சம காலத்தவர்களான கவிசைச் சேவகன், சோமநாத சிவாச்சாரியார், வில்லிபுத்தூர் ஆழ்வார், காளமேகப் புலவர், இரட்டைப் புலவர்கள், சிவப்பிரகாசர் ஆகியோர் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்துள்ள செய்தியைப் பல சான்றுகள் புலப்படுத்துகின்றன. விஜய நகர ஆட்சிக் காலத்தில் இக்கோயில் சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கியதற்கு அருணகிரிநாதரின் திருப்புகழும் ஒரு சான்றாகும்.

*மருமல்லியார் குழலின் மடமாதர்*
*மருள் உள்ளி நாயடியன் அலையாமல்*
*இரு நல்ல வாகும் உனது அடிபேண*
*இவை வல்லமான மனதருளாயே*
*கருநெல்லி மேனி அரி மருகோனே*
*கனக வள்ளயார் கணவ முருகேசா*
*திருவலிதாய மதில் உறைவோனே*
*திகழ் வல்ல மாதவர்கள் பெருமானே* [136]

## ஆலய அமைப்பு

'உள்ளம் பெருங்கோவில்' 'ஊனுடம்பே' ஆலயம் என்ற திருமந்திரம்குறிப்பிடும் அடிப்படையில் ஆலயத்தின் பகுதிகள் அமைக்கப்பட்டன. பிரகாரங்கள், ஸ்தூலம், சூக்குமம், காரணம் ஆகிய சரீரங்களையுணர்த்துவது போல் விளங்கின. இறைவன் எங்கும்

நிறைந்திருப்பதைக் கோபுரம் உணர்த்துகிறது. பல தாமரை மலர்களால் மூடப்பட்ட இருதய குகையில் சீவன் உள்ளது. அது போலவே கோபுரங்கள், பிரகாரங்கள், மண்டபங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் மூலத்தானத்தில் இறைவன் குடி கொண்டுள்ளார். ஆலயத்தின் உட்பகுதிகள் படுத்த நிலையிலுள்ள மனிதனின் உடலுடன் ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு நோக்கினால் கருவறை, தலையையும், அந்தராளம் கழுத்தையும், முக மண்டபம் தோள்களையும் மகா மண்டலம் வயிறையும் பிரகாரம் கால்களையும் கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

பாடி திருவலிதாயம் திருக்கோயில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் உயர்ந்த வலிமையான மதிற்சுவர்களால் பாதுகாக்கப்பட்டு விளங்குகிறது. ஆலயங்களின் பொது விதி முறைகளுக்கேற்ப கிழக்கு நோக்கியவாறு விளங்குகிறது. கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள சிறிய மூன்று நிலை இராஜகோபுரம் பிரதான வாயிலாக விளங்குகிறது.[137]

## கொடிமரம்

வெளிக் கோபுரத்துக்கும் பலிபீடத்திற்கும் இடையே கொடிமரம் உள்ளது. ஆலயக் கொடிமரம் ஈசனின் பெருமைகளை வெளிப் படுத்துகின்றன.[138]

## பலிபீடம்

தீய, சிந்தனை போன்றவற்றைப் பலி கொடுத்தால் ஈசனை வெகு எளிதில் சென்றடையலாம் என்ற உண்மையை உணர்த்துவதே பலிபீடமாகும்.

## நந்தி

சிவபிரானுக்கு வாகனமாக விளங்குபவர் நந்திதேவர் ஆகம விதி முறைகளுக்கேற்ப நேராக நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியன நிறுவப்பட்டுள்ளன.

கருவறையில் அனைத்து சிவன் கோயில்களிலும் உள்ளது போலவே மூலவர் லிங்கத் திருமேனியாகக் காட்சி தருகிறார்.

சுயம்பு லிங்கமே திருவலிதாயம் ஆலயத்தில் காணப்படுகிறது. வலியன் என்ற பரத்வாஜ முனிவர் வழிபட்டதால் இவருக்கு வலிதாயநாதர், வல்லீஸ்வரர் ஆகிய பெயர்கள் வழங்கப்படுகின்றன. மூலவருக்கு மேல் தாமரைப் பூ போன்ற அமைப்புடைய பலகை காணப்படுகிறது. சுவாமிக்கு எதிராக மகா மண்டபத்தில் நந்தி தேவர் இடம் பெற்றுள்ளார்.

## கருவறை

மூலவர் எழுந்தருளியுள்ள கருவறையும் அதன் மீது அமைந்துள்ள விமானமும் படுத்த நிலையிலுள்ள யானையின் முதுகுப் புறம் போல அமைந்துள்ளன. இதனை வட மொழியின் கஜபிருஷ்டம் எனக் குறிப்பிடுவர்.

கருவறையின் அடித்தளத்தில் உபபீடமும், அதிஷ்டானமும் அமைந்துள்ளன. உபபீடத்தில் உபானம், ஜகதி ஆகிய உறுப்புக்கள் காணப்படுகின்றன. அதிஷ்டானத்தின் முக்கிய அம்சமான முப்பட்டை சீராக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் பட்டிகை தெளிவாக உருவாக்கப்பட்டுள்ளது. பட்டிகைக்கு மேலும் கீழும் கண்டம் காட்சியளிக்கிறது. கண்டத்திற்கு மேல் போதிகை காணப்படுகிறது. அடித்தளம் எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அம்மன் சந்நிதி

சுவாமி சந்நிதியையடுத்து சிறிது தொலைவில் தெற்கு நோக்கியவாறு அம்மன் சந்நிதி அமைந்துள்ளது. கரு நாடகப் போர்களின் போது பிற மதத்தினர் தாயம்மையின் உருவத்தைச் சேதப்படுத்தினராம். ஒரு வள்ளலின் முயற்சியால் புதிதாக உருவாக்கப்பட்ட உருவமே இச்சந்நிதியில்

காட்சியளிக்கிறது. பழுதான விட்ட பழைய அம்மனின் உருவத்தைச் சுவாமி சந்நிதியில் மூலவருக்கு அருகே ஒரு மூலையில் வைத்துள்ளனர். அம்மன் சந்நிதி கருவறை 18 அடி 17 அங்கும் சதுரமாக விளங்குகிறது.

## வலம்புரி விநாயகர்

கிழக்கு வாயிலுக்கு வலது புறத்திலுள்ள மாடத்தில் வலம்புரி விநாயகர் இடம் பெற்றுள்ளார். துதிக்கை வலது புறமாகத் திரும்பியுள்ள இவ்வடிவம் அபூர்வமானது.

## தீர்த்தம்

ஆலயத்திற்குத் தென் திசையிலுள்ள திருக்குளம் பரத்வாஜ தீர்த்தமாகும். ஆலயத்திற்கு வட கிழக்கில் விநாயகர் கோயிலுக்கருகே அனுமன் தீர்த்தம் அமைந்துள்ளது. ஆலயத்திற்குத் தென் மேற்கில் விஷ்ணு தீர்த்தமும் வட மேற்கில் பிரம்ம தீர்த்தமும் இடம் பெற்றுள்ளன. ஆலயத்திற்குத் தெற்கில் ஒரு கி.மீ. தூரத்திலுள்ள பாலாறும், கூவம் ஆறும் இத்தலத்திற்குரிய புண்ணிய தீர்த்தங்களாகும்.

## தல விருட்சம்

திருவலிதாயத்தில் சரக்கொன்றை, பாதிரி மரம் ஆகிய இரண்டும் தல விருட்சங்களாகக் கருதப்படுகின்றன.

## தேவாரப் பதிகம்

திருஞானசம்பந்தர் தனது தொண்டை நாட்டு யாத்திரையின் போது திருவேற்காடு என்ற தலத்தைத் தரிசனம் செய்த பின்னர் திருவலிதாயம் சென்று அங்கு குடி கொண்டுள்ள ஈசரின் பெருமைகளை ஒரு பதிகத்தின்

மூலம் வெளிப்படுத்தினார். திருஞானசம்பந்தர் திருவலிதாயம் மீது இயற்றியுள்ள பதிகம் முதல் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

### வட திருமுல்லைவாயில்

சென்னையிலிருந்து அம்பத்தூர் ஆவடி வழி திருப்பதி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அம்பத்தூருக்கும் ஆவடிக்கும் இடைப்பட்ட இடத்தே வட திருமுல்லைவாயில் அமைந்துள்ளது.

சென்னையிலிருந்து அம்பத்தூர்வழி ஆவடி செல்லும் பேருந்துகளில் வந்து திருமுல்லை வாயிலில் இறங்கிக் கொள்ளலாம்.

திருப்பதி–திருத்தணி திருவள்ளூரிலிருந்து ஆவடி செல்லும் பேருந்துகளில் வந்தால் ஆவடிதாண்டியதும் இரண்டு கிலோமீட்டலிால் திருமுல்லைவாயிலில் இறங்கிக் கொள்ளலாம் பூந்தமல்லியிலிருந்து வருவோர் அம்பத்தூர் தொழிற்பேட்டை செல்லும் பேருந்தில் இங்கே இறங்கிக் கொள்ளலாம்.

தொண்டை நாட்டுத் திருமுறைத் திருத்தலங்கள் 32–ல் இத்திருத்தலம் 22–வது திருத்தலமாகும்.

இங்குள்ள இறைவியாரின் கோவில் விஜய நகரத்து அரசரால் கட்டப்பட்டது. இறைவர் கோயில் ஆடுதாண்டைச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது.[139]

### கல்வெட்டு

இத்தலத்தில் சோழர், பாண்டியர், நாயக்க மன்னர் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுகள் உண்டு. பார்த்தி வேந்திரவர்மன் காலத்துக் கல்வெட்டுகளும் இருக்கின்றன.[140]

மழவராயன் மகளாகிய கண்டராதித்த பெருமான் மனைவியாராம் செம்பியன் மாதேவியார் அம்பத்தூராரிடமிருந்து நிலம் வாங்கித் திருமுல்லைவாயில் கோவிலுக்கு அளித்துள்ளனர். மண்டபத்தூண் கல்வெட்டு அந்த மண்டபம் கட்டப்பட்ட குறிப்பை அறிவிக்கிறது. ஜாடவர்மன் சுந்தர பாண்டிய தேவனின் கல்வெட்டுப் புழல் கோட்டத்தை விக்ரம சோழ வள நாடு என்று குறிப்பிடுகிறது.[141]

## இறைவன்

மாசிலாமணீஸ்வரர், பாசுபதேஸ்வரர், நிர்மலமணீஸ்வரர், யதிகார பரமேஸ்வரன் அகளங்க பரமேஸ்வரன், முல்லையழகன் என்ற பெயர்களும் இறைவன் பெயர்களாக உள்ளன. ,

## இறைவி

கொடியிடையம்மை, கொடியிடை நாயகி, லதா மத்யம்பாள்; அகறங்கரத்னேஸ்வரி, சித்ர மத்யநாயகி, யதிகார வரமேஸ்வரி என்று இறைவி அழைக்கப்படுகிறார்.

## தலமரம்

முல்லை

## இரண்டு தலங்கள்

திருமுல்லைவாயில் என்ற பெயரில் இரண்டு பாடல் பெற்ற சிவத்தலங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இவற்றை வேறுபடுத்திக் காட்ட தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலம் வட திருமுல்லைவாயில் என்றும், காவிரியில் வடகரையில் சீர்காழிக்கு அருகில் உள்ள சிவத்தலம் தென் திருமுல்லைவாயில் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

## இறைவனின் தன்மை

இங்குள்ள இறைவர், தொண்டைமான் வீசிய வாளினால் சிறிது தாக்கப்பட்டதை இன்றும் இலிங்கத்தில் காணலாம். அப்பகுதி சந்தனக் காப்பினால் மறைக்கப்பட்டுள்ளது. இறைவர் தீண்டாத் திருமேனியுடையவர் என்றும் கூறுவர்.

## தலத்தின் பெருமை

முருகப் பெருமான் இத்தலத்து இறைவரைப் பூசித்தும் பேறு பெற்றுள்ளார். இங்குள்ள கோயிலுள் இரண்டு ‘‘எருக்கமரத் தூண்கள்’’ உள்ளன. இவை தொண்டைமான் சக்கரவர்த்தியால் கொடுக்கப்பட்டவை. முருகப் பெருமானே அன்றிச் சோழன், பிரமன், இந்திரன், ஐராவதம், திருமால், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், துர்வாசர், பிருகு, சித்ரகருமன், சம்புதாசன், குசலவர், காமதேனு, வசிட்டர் முதலியோரும் பூசித்துள்ளனர்.

இது பெரிய கோயில், இதன் கோபுரமும் பெரியது. இங்குள்ள நந்திதேவர் தொண்டைமான் சக்கரவர்த்திக்குப் போரில் துணையாகச் சென்றனர் என்றும் கூறுவர். இதனால் இங்குள்ள நந்தி, கொடி மரத்தை பார்த்த வண்ணம் இருத்தலையும் காணலாம். இறைவரது திருப்பெயர் மாசிலாமணி ஈசுவரர், பாசுவத ஈஸ்வரர் என்பன. இதனைச் சுந்தரர் இறைவியால் பெயர் ‘‘கொடி இடை நாயகியார் என்பது, ‘‘கொடி இடை உமையவள்’’ எனத் தம் இரண்டாவது பாடலில் குறிப்பது கொண்டு தெளியலாம்.[142]

## தீர்த்தம்

இங்குள்ள தீர்த்தம் பாலாறு, சுப்பிரமணிய தீர்த்தம் என்பன. பாலாறு இத்தலம் வழியாகச் சென்றது. இது இப்போது வறண்ட மணல் வெளியாக இருப்பதை இன்றும் காணலாம்.[143]

## கட்டடச் சிறப்பு

இங்குள்ள இறைவியாரின் கோவில் "விஜய நகரத்து அரசரால்" கட்டப்பட்டது. இறைவர் கோயில் ஆடுதாண்டைச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது.[144]

## சுந்தரர்

இத்தலத்திற்குச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்று உள்ளது.

இஃது எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம், இதன் பண் தக்கேசி, இக்காலத்து காம்போதி இராகம் என்று இதனை ஒருவாறு கூறலாம்.

இத்தலத்து இறைவருக்கு வெந்நீர் அபிடேகம் நடைபெறும். இறைவர் திருப்பெயர் மாசிலாமணி ஈசுவரர் என்பதைச் சுந்தரர் பதிகத்தின் வாயிலாகவும் அறியலாம். 'முல்லை வாயிலாய் மாசிலாமணியே' என்று பதிகத்தின் ஐந்தாவது பாடலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இறைவர்க்குப் பாசுபதீசுவரர் என்னும் பெயரும் இருந்தமையை ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'பாசுபதா பரஞ்சுடரே' என்று விசித்திருப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

திருமுல்லைவாயில் பாலாற்றுக் கரையில் வடபால் உனது என்பதையும் சுந்தரர் தம் பாடலில் "வடகரை முல்லை வாயிலாய்" என்று பாடியதால் உணரலாம்.

பிரம்ம சூத்திரத்திற்குச் சிவ பரத்துவ முறையில் பெருவிளக்க உரை எழுதிய நீலகண்ட சிவாசாரியார் திரு உருவம் இக்கோயிலில் உண்டு.

இத்தலத்துச் சுந்தரர் பாடல், சுந்தரரின் வாழ்க்கை குறிப்புகளுள் சிலவற்றை நன்கு தெரிவிக்கும் முறையில் அமைந்துள்ளது.

இவர் தம் கண் பார்வை இழந்து பெரிதும் வருந்திய நிலையை, ''பரவிரும் அடியோர் பகையர் களையாய்'' என்று பாடல்களின் இறுதி தோறும் பாடி இருப்பதனால் உணரலாம். இவருக்குக் கண் பார்வை அருளும் படி, ''தமிழால் பாடுவேற்கு அருளாய்'' என்று முறை இடுவது சிந்தனைக்கு விருந்தாய் அமைவது. இதனால் தமிழில் வேண்டுகோள் விடுத்தால் இறைவர் அருள் செய்வார் என்பது குறிப்பு.

இறைவர் தம் கண் பார்வையை அழித்ததற்குக் காரணம் திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியார்க்குக் கூறிய சத்தியத்தைப் பிழைத்ததனால் என்பதையும் ''நன்பொழில் ஒற்றிமா நகருடையாய் சங்கிலிக்கா என், கண் கொண்ட பண்பா'' என்று கசிந்து உருகிப் பாடி அறிவித்து இருப்பதைக் கொண்டு அறியலாம்.

சுந்தரர் தமது குற்றத்தை உணர்ந்து இறைவரிடம் முறையிட்டதையும் ''மற்று நான் பெற்றதார் பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக், குற்றமே செயினும் குணம் எனக் கொள்ளும் கொள்கையால் மிக பல செய்தேன்'' என்று பாடி இருத்தலையும் அவர் உள்ளக் கசிவை உணரலாம்.

இவற்றோடு, இறைவர் இவரைத் திருவெண்ணெய் நல்லூரில் ஆட் கொண்ட நிலையினையும் 'நம்பனே, அன்று வெண்ணெய் நல்லூரின் நாயினேன் தன்னை ஆட் கொண்ட சம்புவே' என்றும் குறிப்பிட்டுப் பாடியதையும் அறியலாம்.

***திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்கு உன்***
***சீருடைக் கழல்கள் என்றெண்ணி***
***ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும்***
***ஊடியும் உரைப்பானாய்த் திரிவேன்***

*முருக மலர்ச்சோலை சூழ் திருமுல்லை*
*வாயிலாய் வாயினால் உன்னைப்*
*பரவிடும் அடியேன் படுதுயர் களைவாய்*
*பாசுபதா பரஞ்சுடரே* [145]

திருமுல்லை வாயிலின் தலச் சிறப்பைப் புகழும் போது,

*தேடிய வானோர் சேர் திருமுல்லைவாயில்*
*மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய*
*வார் குழல் மாமயில் சாயல்*
*அணிகெழு கொங்கை அங்கயல் கண்ணார் அருநடம்*
*ஆடல் அறாத திருமுல்லைவாயில்*

**செம்பொன்மா மாளிகை சூழ் திருமுல்லை வாயில்**

*செல்வத் திருமுல்லை வாயில்*
**நல்லார் பரவும் திருமுல்லை வாயில்**

என்று புகழ்ந்துள்ளது.[146]

இத்தலம் பாலாற்றங்கரையின் வடகரையில் இருந்தது என்னும் குறிப்பு

**நடனம்**

இத்தலத்து இறைவர் பல்கலைப் பொருள் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இவரது ஆட்டம் இலயம் சதி பிழையாமல் உமாதேவியார் காண ஆடப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை, “கூடிய இலயம் (பல திறன்கள் கூடிய கூத்து) கதி (தாளம்) பிழையாமைக் கொடி இடை உமையவள் காண ஆடிய அழகா என்னும் வரியால் அறிந்து கொள்ளலாம்.[147]

உமாதேவி அஞ்சியதால் யானையைக் கொன்று அதன் தோலை உரித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. “மாதர் வெகுவிட (அஞ்ச) வேழம் (யானை) அன்று உரித்தாய்” என்னும் வரிகள் உணர்த்துகின்றன.

சுந்தரர் தமது தொண்டை, “பாடிப்பரவிடும் அடியேன்”, என்றும் திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன்” என்றும், “திருப்புகழ் விருப்பால் பன்னலத் தமிழால் பாடுவேன்” என்றும் “எவ்வியும் பகலும் பணியது செய்வேன்” என்னும் உன்னைத் தேடித் திரியேன்” என்னும் பாடி உணர்த்தி இருப்பதைக் காணலாம்.

திருமுல்லைவாயில் முருகப் பெருமான் மீது அருணகிரி நாதர் திருப்புகழ் மூன்றும் பாடி இருக்கின்றார். சான்றாக,

*வாதினால் வருகாளியை வென்றிடு*
*ஆதி நாயகர் வீறு தயங்குகை*
*வாரிராசனுமே பணியும் திருநட பாதர்*
*வாசமா மலரோடு செந்திரு*
*மார்பில் வீறிய மாயவனும் பணி*
*மாசிலா மணி ஈசர் மகிழ்ந்தரும் பெருமானே* [148]

என்னும் திருப்புகழ்ப் பாடலைக் காணலாம்.

**தலத்தின் சிறப்பு**

திருமுல்லைவாயில் மலரினால் அமைதலின், இது முல்லை வாயில் எனப்பட்டது. இத்தலத்தின் சிறப்பு முல்லை மலரினால் அமைதலின், இது முல்லை வாயில் எனப்பட்டது. சண்பகாரண்யம் என்னும் இதனைக் கூறுவர். முல்லைக் கொடி இங்கு விசேடம் என்னும் குறிப்புச் சுந்தரர் பாடியுள்ள இத்தலத்துப் பதிகத்தின் பத்தாவது பாடலின் வழி நன்கு தெளிவாகின்றது.

தொண்டைமான் இங்கு வேட்டை ஆட வந்தனன். அது போது அவனது யானை முல்லைக் கொடியில் சிக்கிக் கொண்டு மேலே அடியெடுத்து வைக்க முடியாமல் தத்தளித்தது. அதனைக் கண்ட தொண்டைமான் தனது வாளினால் முல்லைக் கொடிகளைச் சிதைத்தான்.

அப்படிச் சிதைத்த போது இறைவன் அங்குத் தோன்றிக் காட்சி அளித்தனர். அவனுக்குத் திருவருளும் புரிந்தரர்.

*சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்*
*சூழ்கொடி முல்லையால் கட்டிட்*
*டெல்லையில் இன்பம் அவன் பெற வெளிப்பட்*
*டருளிய இறைவனே என்றும்*
*நல்லவர் பரவும் திருமுல்லை வாயில்*
*நாதனே நடை விடைஏறி*
*பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்*
*பாசுப தாபரஞ் சுடரே* [149]

என்னும் பாட்டில் பெறப்படுகிறது.

14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரட்டைப் புலவர்களான இளஞ்சூரியன், முதுசூரியன் ஆகியோர் (ஒருவர் குருடர்; மற்றொருவர் முடவர் ஆவர்) இத்தலத்து இறைவனை வணங்கிப் பாடியுள்ளனர்.

15 ஆம் நூற்றாண்டைச் சேர்த்த அருணகிரிநாதர் இத்தலத்து இறைவனை வணங்கியுள்ளார்.

## திருக்கோயிலின் தீர்த்தம் வேறு பெயர்கள்

மாதை தீர்த்தம், குகனருந்தடம், அயிராவத தீர்த்தம் எனப் பலப் பெயர்கள் உள்ளன.

## திருக்கோயிலின் தல மரம்

வில்வ மரம், முல்லைக் கொடி

## திருக்கோயிலின் புராண வரலாறு

தொண்டை நாட்டுக்கு வட திசையில் குறும்பர்கள் வாழ்ந்தனர். திருப்பாசூர் திருத்தல வரலாற்றில் இடம் பெற்ற குறும்பர்கள் இவர்கள்

வெள்ளெருக்கந் தூண்களைக் கொண்டு பெரு மதில்கள் அமைத்து, மக்கள் நலம் கருதாத கொடுங் கோலாட்சி செய்து வந்தனர்.

ஓணன் என்றும், வாணன் என்றும் அழைக்கப்பட்ட இவர்கள், இறுதியில் தொண்டை நாட்டைச் சேர்ந்த புழல் கோட்டத்திற்குள் நுழைந்து மக்களுக்குத் தீங்கு விளைவித்து வந்தனர்.

தொண்டை நாட்டுத் தலைநகராம் காஞ்சியில் இருந்த தொண்டைமான் சக்கரவர்த்தியிடம் இது பற்றி முறையிட்டனர். படையுடன் திருமுல்லைவாயில் வந்தடைந்தான் தொண்டைமான்.

முதலில், தொண்டைமான் படைகளில் கடுமையான தாக்குதலுக்கு ஆற்றாதவராய்க் குறும்பர்கள் பின்வாங்கி ஒளிந்து கொண்டனர். சிறிது நேரம் கழித்து, வைரவனின் உதவியால் பெற்ற பூதத்தின் துணை கொண்டு மீண்டும் போர் புரிந்தனர்.

இம்முறை தொண்டைமான் படைகள் பின் வாங்கின. தொண்டைமான் போரை நிறுத்தி விட்டு பாசறைக்குத் திரும்பினான்.

அவ்வாறு திரும்புகையில் மன்னன் ஏறி வந்த யானையின் கால்கள் முல்லைக் கொடிகள் சுற்றி யானை கரங்களை நகர்த்த இயலாத படி சுற்றியதால் முல்லைக் கொடிகளை தனது இடைவாளால் வெட்டி எறிந்தான்.

வெட்டிய இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டு வந்ததால் அதிர்ச்சி யுற்ற மன்னன் கொடிகளை விலக்கிப் பார்த்தான்.

இறைவன் திருஉருவாகிய லிங்கம் அங்கு இருந்தது. இதனால் மனமுடைந்த தொண்டைமான் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முற்பட்டான். அப்பொழுது இறைவன் தோன்றி அவனை தேற்றித் தான் எப்பொழுதும் மாசில்லாமணியாகவே இருப்பேன் என வாக்களித்தான்.

மீண்டும் மன்னன் போருக்குச் சென்று குறும்பர்களை வென்றான். அவர்களின் அரண்களில் இருந்த வெள்ளெருக்கந் தூண்களை எடுத்து வந்து மண்டபம் அமைத்து திருக்கோயில் எழுப்புவித்தான் என்று குறிப்பிடப்படுகிறது.

## கோயிலின் அமைப்பு

பதினாறு கால் மண்டபத்திற்கு எதிரே தெற்கு நோக்கிய ராஜகோபுரம் உள்ளது. இடது பக்கம் பிரசன்ன விநாயகர் சிலையும், தொண்டைமான் அருள் பெற்ற சிற்பமும் உள்ளது. இறைவனின் பக்கத்தில் கொடியிடை நாயகி இருக்கின்றார். அம்பாளுக்கு எதிரே பலிபீடமும், சிம்மமும் உள்ளன.

பிறைக்கோட்ட விக்கிரகங்கள் அனைத்தும் முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன.

மூலவருக்கு நேரே திரும்பிய நிலையில் நந்தி உள்ளது. இதே போன்று திரும்பிய நிலையில் நந்தி திருவலத்திலும், திருவோத்தூரிலும் உள்ளன.

இவ்விடத்தில் வழிபட்டு மேன்மையடைந்த அவர்கள் பட்டியலில் திருமால், பிரம்மா, முருகன், இந்திரன், இந்திராணி, ஐராவதம், சந்திரன், சூரியன், அடிவளி முதலான 27 நட்சத்திரங்கள், தேவமித்திரன், சம்புதாசன், சித்தர தன்மன், சூதமுனிவர், பிருகு, வசிஷ்டர், குசலர், துர்வாசர் முதலானோர் அடங்குவர்[150]

## தனிச்சிறப்புகள்

இக்கோயிலை சூரியன் முதலான அனைத்துக் கோள்களும் மாசிலமாணியை வழிபட்டமையால் இங்கு நவக்கிரக சந்நிதி தனியே

கிடையாது. இத்திருக்கோயிலின் வடக்குத் தெருவில் நீலம்மை ஆசிரமும், கிழக்கில் இராமலிங்க சுவாமி மடமும், மேற்குத் தெருவில் எட்டியம்மன் கோயிலும் உள்ளது.

## 3. தலத்தைப் பாடியவர்கள்

1. இரட்டைப்புலவர்கள் அம்மானை
2. மாதவசிவரான மோகிகள்: அந்தாதி
3. இராமலிங்கர் 1. அருளியல் வினாவல், 2. திருமுல்லை வாயில் திருவிண்ணப்பம்.
4. மயிலை சண்முகம் பிள்ளை: தலபுராணம்
5. தில்லை விடங்கன் மாரிமுத்துப்பிள்ளை – கொடியிடையம்மன் பஞ்சரத்தினம்,
6. பண்டித மனோன்மணி அம்மன்: கொடியிடைநாயகி அந்தாதி.
7. பாம்பன் சுவாமிகள் குகபர்வண்ணம்.

### நிர்வாகம்

இந்து சமய அறநிலைத் துறையின் மேற்பாட்டில் இயங்குகிறது.

### இன்றியமையாத விழாக்கள்

| | | |
|---|---|---|
| சித்திரை | : | ஆண்டுப் பிறப்பில் சந்தனக்காப்பு |
| வைகாசி | : | 11 நாட்கள் பிரம்மமோற்சவம் |
| ஆனி | : | வசந்தோற்சவம் – 3 நாட்கள் |
| ஆடி | : | வெள்ளிலட்சதீபம் |
| ஆவணி | : | விநாயகர் சதுர்த்தி |

புரட்டாசி : நவராத்திரி கொலு

ஐப்பசி : மூலவருக்கு அன்னாபிஷேகம்

கார்த்திகை : கடைசித் திங்கள் 108 சங்காபிஷேகம்

மார்கழி : திருவாதிரை – ஆருத்ரா உற்சவம்

தை : கிருத்திகை

மாசி : கிருத்திகை : தெப்பம் – மகாசிவராத்திரி

பங்குனி : பங்குனி உத்திரம்

## கோயில் திறந்திருக்கும் காலம்

காலை : 6.00 மணி முதல் 12.00 மணி வரை

மாலை : 4.00 மணி முதல் 6.00 மணி வரை

## திருவேற்காடு

தொண்டை நாட்டுத் திருமுறைத் திருத்தலங்கள் 32–ல் இத்திருத்தலம் 23–வது திருத்தலமாகும்.

1400 வருடத்திற்கு முன் சோழ மன்னனால் கட்டப்பட்ட வேதபுரீசுவரர் ஆலயத்திற்குச் சம்பந்தர், அருணகிரிநாதர் ஆகியோர் பாடல் பாடியுள்ளனர். வேதங்கள் அனைத்தும் வெள்வேல மரங்களாய் தொழுதிருக்கின்றன.[151]

## தலச் சிறப்புகள்

இத்தலத்திற்கு வேலமரம் தல விருட்சம். இத்தலத்தை முருகப் பெருமான் சூரபதுமனைக் கொல்லும் பொருட்டு இறைவரது ஆசி பெறப்

பூசித்துள்ளான். முருகப்பெருமான் பிரமனைச் சிறையிட்டதால் இறைவரைப் பூசித்து மன்னிப்பு வேண்டிய தலம். இங்கு முருகன் சிவலிங்கத்தை வழிபாடு செய்யும் கோலத்தில் நின்றிருப்பதைக் காணலாம். குமரன் வேல் ஏந்திய வேலனாகவும் இருக்கின்றான். அக்கோலத்துடன் காட்சி தந்த தலங்களுள் திருவேற்காடும் ஒன்று.

### கோயில் அமைவிடம்

இத்தலம் கூவ நதிக் கரையில் உள்ளது. இந்த நதியைப் பாலி நதி என்றும் கூறுவர்.

### நம்பிக்கை

இத்தலத்து பாலாம்பிகையும், திருவலிதாயம் செகதாம்பிகையும், திருஒற்றியூர் வடிவாம்பிகையும் ஒரு நாளில் வழிபட துன்பங்கள் விலகும் என்ற நம்பிக்கை இன்றளவும் நிலைபெற்றுள்ளது.

இத்தலத்தில் விடம் தீண்டுவதில்லை. அதாவது விட பயம் இல்லை.

### தீர்த்தம்

தீர்த்தம் வேலாயுத தீர்த்தம், இத்தீர்த்தம் வற்றாத நீரையுடையது இந்தத் தீர்த்தம் முருகப் பெருமான் தன் வேலாயுதத்தால் தோண்டித் தோற்றுவித்த தீர்த்தமாகும். மற்றொரு தீர்த்தம் வேத தீர்த்தம் எனப்படும். இதில் ஞாயிறு தோறும் நீராடினால் குட்ட நோய் நீங்கும் என்று கூறப்படுகிறது.[152]

### மூர்க்க நாயனார்

இத்தலம் 63 நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்க நாயனார் திருஅவதாரத் தலமாகும்.[153]

மூர்க்க நாயனார் சூதாட்டத்தினால் வரும் பொருளைக் கொண்டு அடியார்க்கு உணவு படைத்து வந்தார். அவர் ஒரு முறை கும்பகோணம் சென்றார். அங்குள்ளோரிடமும் சூதாடினார். அவர்கள் சூதாட்டத்தில் முரண்பாடாகக் கலந்து கொள்ளவே அவர்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கினார். இதனால் இவருக்கு மூர்க்கர் என்ற பெயர் உண்டாயிற்று.

சூதாட்டத்தில் வந்த பொருளைத் தம் குடும்பத்திற்குப் பயன்படுத்தினார் இல்லை. அடியார்களை உண்பித்த பின்பே கடைசியில் உண்டு மகிழ்வர்.

இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடியுள்ள பதிகம் ஒன்றே உளது. இஃது ஆசிரியத் துறையால் ஆனது. இதன் இலக்கணம் திருஒத்தூர்ப் பதிகத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் பண் பழந்தக்க ராகம். இஃது இக்காலத்து அரபி இராகம் போன்றது என்பர்.

இத்தலத்தின் மாண்பைக் கூறவந்த திருஞான சம்பந்தர்

*வேற்காடு, உள்ளியார் உயர்ந் தார் இவ்வுலகினில்*
*தெள்ளி யார் அவர் தேவரே*

*வேற்காடு, வாடியும் பணிந் தார் இவ்வுலகினில்*
*சேடர் ஆகிய செல்வரே*

*வேற்காடு போதும் சாந்தும் பகையும் கொடுத்தவர்க்கு*
*ஏதம் எய்துதல் இல்லையே*

*வேற்காடு, தாழ்வு டைமனத் தார்பணிந் தேத்திடப்*
*பாழ்படும் அவர் பாவமே*

*வேற்காடு, பாட்டி னால் பணிந் தேத்திட வல்லவர்*
*ஓட்டினார் வினை எல்லையே*

*வேற்காடு, நூலி னால் பணிந் தேத்திட வல்லவர்*
*மாலி னார் வினைமாயுமே*

*மேற்காடு சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்*
*செல்ல வல்லவர் தீர்க்கமே*

*வேற்காடு, வார மாய் வழி பாடு நினைத்தவர்*
*சேர்வர் செய்கழல் திண்ணமே*

*வேற்காடு, ஈறிலா மொழியே மொழி யாளழில்*
*கூறி னார்க்கில்லை குற்றமே!* [154]

என்று கூறியுள்ளார். ''ஈண்டத் தமிழ் மொழியை ஈறு (அழிவு) இல்லா மொழி'' என்று குறிப்பிட்டிருப்பதை நன்கு உணரவும் வடமொழி இக்காலத்தில் வழக்கற்ற மொழி என்று கூறப்படுகிறது. அவர் காலத்தில் அஃது அந்நிலை உள்ளது. அதனை உட்கொண்டு தான் தமிழை ''ஈறிலா மொழி'' என்று கூறினார்.

இறைவர் வெள் வேல மரத்தடியில் வீற்றிருக்கும் குறிப்பு ''மேலினால் உறைவேற்காடு'' என்னும் வரியால் விளங்குகிறது.

இத்தலத்தின் இயற்கை அழகு ''விண்ட மாம் பொழில் சூழ் திருவேற்காடு'' என்று கூறப்பட்டுள்ளது.

''நாம் உயர்ந்தவற்றையே எண்ண வேண்டும் அப்படி எண்ணினால் நற்கதி உண்டாகும்'' என்கிறார். ''ஒள்ளிது உள்ளக் கதிக்கு ஆம்'' என்னும் தொடரால் நன்கு அறியப்படுகிறது.

திருஞானசம்பந்தர், தம் தமிழைச் செந்தமிழ் என்றும் அத்தமிழால் இறைவரைப் பாட நல்ல குணங்கள் உண்டாகும் என்னும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பதிகத்தில் சமண பௌத்தர்களைப் பற்றிய குறிப்பு இல்லை.

*ஆடல் நாகம் அசைத்தள விப்பதோர்*
*வேடம் கொண்டவன் வேற்காடு*
*பாடி யும் பணிந்தார் இவ் உலகினில்*
*சேடர் ஆகிய செல்வாரே* [155]

இத்தலத்து முருகன் மீது இரண்டு திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன.

## திருக்கோயிலின் அமைப்பு

இத்திருக்கோயிலின் இராஜகோபுரம் கிழக்கு நோக்கியும், மூலவர் வேதபுரீசுவரர் கிழக்கு நோக்கியும், இலிங்கத்திருவுருக் கொண்டு அமைந்திருக்கின்றார். அன்னை பாலாம்பிகையும் கிழக்கு நோக்கியே உள்ளனர்.

கருவறையின் விமானம் 'கஜப்பிருஷ்ட' வகையில் அமைந்துள்ளது.

அகத்தியருக்காக, திருமணக் கோலத்துடன் சிவசக்தி தம்பதியர் காட்சியளித்த தலமே திருவேற்காடு மூலத்தானத்தில் லிங்க உருவிலிருக்கும் வேதபுரிசுவருக்குப் பின்னால் மணக்கோலத்தில் காட்சியளிக்கின்றார். இரு பிரகாரங்களுக்கிடையில் உள்ள மண்டபத்திலும், அகத்தியர்க்கு ஈசன் மணக்கோலம் காட்டியருளும் காட்சி எழிலுற சுதை சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

திருவத்தூர் கோயிலில் உள்ளது போல இத்தலத்திலும் பஞ்சபூதத் தலங்கள் உள்ளன. கிழக்கில் இந்திர லிங்கமும் அமைந்துள்ளது. திருஞான சம்பந்தர் வேதபுரீஸ்வரர் மீது பதினொரு பாடல்களைப் பாடியுள்ளார்.[200]

## திருக்கோயிலினுள் எழுந்தருளியுள்ள பிற சன்னதிகள்

விநாயகர் சன்னதி, முருகர் சன்னதி, அம்மன் சன்னதி, சனீசுவரர் சன்னதி, அருணகிரிநாதர் சன்னதிகள்.

## கருமாரியின் திருவுருவம்

இடைக்காலத்தில் ஏற்பட்டதே கருமாரியின் வேற்காட்டுக் கோயில் கருமாரியின் வரவை எதிர்பார்த்தது போல அம்மன் சன்னதிக்கருகே உள்ள ஒரு தூணில் வேற்காட்டு நாயகியின் திருவுருவம் எழிலுற

செதுக்கப்பட்டுள்ளன. கோயில் கட்டிய சோழனும், சிற்பம் வடித்த சிற்பியும் உண்மையில் தீர்க்கத்தரிசிகளே என்பது தெளிவாகின்றது. [156]

## கல்வெட்டுச் செய்திகள்

வேதபுரீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகளை மத்திய அரசு தொல்லியல் துறை படியெடுத்துள்ளது. இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் ஒன்றும் முதற்குலோத்துங்கன் காலத்தது ஒன்றும், வீரராசேந்திரன் காலத்தது ஒன்றும், இரண்டாம் இராசராசன் காலத்தது ஒன்றும், சம்புவராயர் வென்று மண் கொண்டார் காலத்தது ஒன்றும் தெலுங்குச் சோழர் காலத்தது ஒன்றுமாகும்.

இத்திருக்கோயில் பழமையானதும், இரண்டாம் இராசேந்திரன் காலமான கி.பி.**1051**க்கும் முந்தியது. இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் திருவேற்காடுடைய மகாதேவர் ஆலயம் என வேதபுரீசுவரர் ஆலயம் அழைக்கப்பட்டது. இக்கல்வெட்டுகள் கோவிலுக்கு அளிக்கப்பட்ட கொடைச் சிறப்புக்களைப் புலப்படுத்துகின்றது.

## மகாதேவர் கோவில்

இக்கோவிலுக்கு மகாதேவர் கோயில் என்ற பெயர் தான் முதலில் வழங்கப்பட்டுள்ளது. “திருவேற்காடுடைய மகாதேவர் கோயில்” “வேற்காடுடையார் கோயில்” என்றே கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. வேதபுரீசுவரர் கோயில் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.

பிற்காலத்திலே தான் வேதபுரீசுவரர் கோயில் என்று குறிப்பிடப்பட்டது. திருவேற்காட்டில் முதலில் இருந்த தமிழ்ப் பெயர் வடமொழிப் பெயராக மாறியுள்ளது.

திருமால், பிரம்மன் எல்லோரும் சிவனுள் அடங்கிச் சிவநாமம் சொல்லி வாழும் வேற்காடு என்று ஞான சம்பந்தப் பெருமான் பாடியுள்ளார்.

### சோழ நல்லூர்

வேற்காடு நாட்டு மும்முடிச் சோழ நல்லூரில் ஒரு பகுதியாக வீரராசேந்திர சோழனின் காலத்தில் விளங்கிய திருவேற்காடு முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் மும்முடிச் சோழ நல்லூரான திருவேற்காடு என்பதே சோழ நல்லூராக மாறி இருக்கிறது.

### கஜபிருஷ்டம்

வேதபுரீசுவரர் கோவிலின் விமானம் கஜப்பிருஷ்டம் விமானம் ஆகும். இத்திருக்கோயில் 276, 176 என்ற அளவில் நீள அகலம் உள்ளது. கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. கிழக்குவாயிலில் ஐந்து நிலை கொண்ட கோபுரமான பஞ்ச தள கோபுரம் உள்ளது.

### அமைப்பு முறை

இக்கோயிலில் கருவறை, அதை அடுத்துச் சிறுகூடம், அதன்பின் அர்த்த மண்டபம், அதற்கு அடுத்த மகா மண்டபம் மேற்கிலிருந்து கிழக்காக ஒன்றன் பின் ஒன்றாக உள்ளது.

### கீழ்த்திசை

கிழக்குத் திசையில் கோபுர வாயில் வழியாக உள்ளே, நந்தி, கொடிக்கம்பம், பலிபீடம் ஆகியன முதற்சுற்றாகும்.

### இரண்டாம் சுற்று

இரண்டாம் சுற்றில் மகா மண்டபம் 23 நீளம் 22 அடி அகலம் உள்ளது. இம்மகா மண்டபத்தில் இடது, வலது புறங்களில் அழகிய தூண்கள்

அமைந்துள்ளன. வட்டமான தூண்களின் எழில் போற்றத்தக்கது. முகப்பில் சதுரத் தூண்களும் உள்ளன. நுழைவாயின் மேலே சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பார்வதி, பரமசிவன் திருக்கோலம் உள்ளது.

## மகா மண்டபம்

இம்மகா மண்டபத்தில் நந்தியும், பலிபீடமும் உள்ளன. இடப்புறம் வலத்தில் அகத்தியர், சூரியன், நவக்கிரகங்கள் உள்ளன.

மேற்கு நோக்கி, 63 நாயன்மார்களும் வரிசையாகத் தோன்றுகின்றனர். 63 பேரும் கல்லில் வடிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குப் பகுதியில் கருவறைக்குப் பின்னால் லிங்கம், காசி விசுவநாதர், விசாலாட்சி, அனபாய சோழன், சேக்கிழார் ஆகியோரின் சிலா வடிவங்கள் காணப்படுகின்றன.

வடமேற்கு மூலையில் முருகப் பெருமான் கோயில் உள்ளது. வடக்குப் பகுதியில் அலங்கார மண்டபம் உள்ளது.

## கருவறைச் சுவர்கள்

கருவறையின் தெற்குப் பக்கச் சுவர் மாடங்களில் விநாயகர், தென்திசைச் செல்வராம் தட்சிணாமூர்த்தி ஆகியோர் உருவங்களும், மேற்குப் பக்கச் சுவர் மாடத்தில் இலிங்கோத்பவர் உருவமும், வடக்குப் பக்க மாடத்தில் பிரம்மர், துர்க்கை ஆகியோர் உருவங்களும் உள்ளன. இந்த அமைப்பு முறை முற்காலச் சோழர் காலம் முதலாகத் தொடரும் முறையாகும்.

## அர்த்த மண்டபம்

மகா மண்டபத்தை அடுத்து அர்த்த மண்டபம் ஆகும். 19, 11, 10 அதை அடுத்து இருப்பது அண்டராலா எனப்படும் சிறு கூடமாகும். 10, 10, 7.5 அளவுள்ளது.

## உண்ணாழி

உண்ணாழி எனப்படுவது கருவறை ஆகும். இதனை வடமொழியில் கர்ப்பக்கிரகம் என்பர்.

இத்திருக்கோயில் கருவறை முதல் பல்லவர் காலத்திய கருவறை என்று கருதப்படுகிறது. இது 16.8.6 மீட்டர் அளவுடையது. உண்ணாழியின் அடித்தளம், உட்பீடம், பீடம், குமுதம், யாஸிவரி, கண்டம், வேதிகை ஆகிய அமைப்புகளுடன் காணப்படுகிறது. இக்கருவறை பிற்காலக் கலப்பு ஏதும் இல்லாத தனித்த கட்டட அமைப்பில் உள்ளது.

கருவறைக்குரிய கஜபிருஷ்ட விமானம். விமானத்தின் மீது ஐந்து கலசங்கள் காணப்படுகின்றன. இத்தகைய விமானத்தை வண்டியினி, கூடு போன்ற விமானம் என அழைப்பர். சிகரத்துக்குக் கீழே உள்ள கற்றுப் பகுதியில் நான்கு மூலைகலும் நந்தி படுத்திருக்கும் பாங்சில் அமைக்கப்பட்டுள்ளது.

கருவறையின் கட்டட அமைப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. இது தொண்டை மண்டலத்துக்கே உரிய தனி வடிவமான யானையின் பின் புற வடிவில் அமைந்தது. இத்தகு அமைப்பு திருவொற்றியூர், திருத்தணி முதலிய திருத்தலங்களிலும் காணப்படுகிறது. மாமல்லைச் சகாதேவ ரதம் இந்த அமைப்புடையது.

## பெருமைகள்

சிவ ஆலயங்களில் சிவபெருமான் லிங்க வடிவில் கருவறையில் இருப்பார் அல்லது நடராசர் தோற்றத்துடன் கருவறையில் இருப்பார்.

அன்னை உமையவள் தனியாகத்தான் கோயில் கொண்டு இருப்பாள். மதுரை மீனாட்சி, மயிலைக் கற்பகாம்பாள், தில்லைச் சிவகாமி

என்று பல சான்று காட்டலாம். சிவனுடன் அமர்ந்தோ, நின்றோ கருவறையில் எங்கும் இருப்பது இல்லை.

அம்மையும் அப்பனும் இணைந்து நின்று சிலா வடிவில் தோன்றுவது அபூர்வமே. சில இடங்கள் மட்டும் இவ்விதிக்கு விலக்காகும். மதுரை, திருவீழிமிழலை, திருமணஞ்சேரி, இறைவர்கள் திருமணக் கோலத்தவர்கள், ஆயினும் தனியே காட்சி தருபவர்கள். ஆனால் வேத புரீசுவரரும், இறைவி பாலாம்பிகையும் திருமணக் கோலத்தில் சிலா வடிவமாக மூலத்தானத்தில் தோற்றமளிப்பதை இத்திருக்கோயிலில் மட்டுமே காணலாம்.

## மணவிழா

கயிலையில் மணவிழா நடைபெற்ற போது முனிவர்கள் எல்லாம் வந்து விட்டதால் தென்புலம் தாழ்ந்து வடபுலம் உயர்ந்தும் விட்டது. குறுமுனி அகத்தியரைத் தென்புலம் அனுப்பி சமன் செய்ய இறைவன் ஏற்பாடு செய்தார். தென்புலம் வந்த அகத்தியர் மணவிழாக் காணாத குறை கொண்டார். அவர் குறை தீர்க்க இறைவனும், இறைவியும் தங்கள் மணக்கோலத்தை இங்குக் காட்டியதாக நம்பிக்கை.

## பாலாம்பிகையின் தோற்றம்

அன்னை பாலாம்பிகையின் திருக்கோயில் பிற்காலத்திய சேர்க்கை, இது நாயக்கர் காலத்தில் கட்டப் பெற்றது ஆகும். இதன் விமானம் ஏக தனி விமானம். அன்னையின் நான்கு கைகள் இரண்டில் பாச அங்குசமும், இரண்டில் அபய, பாதணிகளும் தோற்றமளிக்கின்றன. பன்னிரு திருமுறைத் திரட்டு நூலில் அன்னை பெயர் வேற்கண்ணி என்று கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டில் மூர்க்க நாயனார்

பெரிய புராணம் மட்டுமல்லாது, இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் எழுதப் பெற்றுள்ள கல்வெட்டும் மூர்க்க நாயனார் அவதரித்த தலம் என்பதைக் காட்டுகின்றது.

சிவமயம் ஸ்ரீ வடவேதாரண்யமான இத்திருவேற்காட்டில் அவதரித்தவரும் பெரிய புராணத்தில் கண்டிருக்கும் 63 சிவனடியார்களில் ஒருவருமான மூர்க்க நாயனார் கலியுகாப்தம் ஆண்டு 3110 இல் மோட்சம் அடைந்தார். ஷ வம்சத்தினரான இராமலிங்க முதலியார் சிவ பதவியானது சாலி வாகன சகாப்தம் ஆயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு ராட்சஸ வருஷத்தில் தை மீ 8 ம் 2 சுக்கல பட்சம் 3–ம் உ வம்சத்தரும் குமாரருமான மூர்க்க முதலியார் சிவ பதவியானது சகாப்தம் ஆயிரத்து இருநூற்று ஆறுக்கு குருரான ஸ்ரீ பங்கு மீ 20–ம் உ சுபமஸ்து.

இதில் குறிக்கப் பெற்றுள்ள ஆண்டு தவறானது என்பது தொல்லியல் அறிஞர் நடன காசிநாதன் கருத்தாகும்.

திருவேற்காடு, வேதபுரீசுவரை சுற்றி அஷ்ட லிங்கங்கள் பரிபாலனை செய்கின்றன. அவை,

1. இந்திரலிங்கம் – வள்ளி கொள்ள மேடு (கிழக்கு)
2. அக்னி லிங்கம் – (நூம்பல்) (தென்கிழக்கு)
3. எமலிங்கம் – சென்னீர் குப்பம் (தெற்கு)
4. நிறுதி லிங்கம் – பாரி வாக்கம் (தென் மேற்கு)
5. வருண லிங்கம் – மேட்டுப்பாளையம் (மேற்கு)
6. வாயுலிங்கம் – பருத்திப்பட்டு (வடமேற்கு)
7. குபேரலிங்கம் – சுத்த சோழபுரம் (வடக்கு)
8. ஈசான லிங்கம் – சின்ன கோலடி (வடகிழக்கு)

இத்தலத்தில் மட்டும் தான் சனீஸ்வரருக்குத் தனி சன்னதி உள்ளது. திருநல்லூற்றிற்கு அடுத்த படியாகச் சனீஸ்வரருக்கு தனி சன்னதி உள்ளது இத்தலத்தில் மட்டும் தான்.

இந்தச் செய்திகள் அனத்தும் வேதபுரீஸ்வரர் ஆயத்தில் இருக்கும் குருக்கள் ஆர்.சந்தான குருக்கள் அவர்களால் பெறப்பட்டது.

## தொகுப்புரை

சென்னையில் அமைந்துள்ள தேவாரத்திருமுறைகளால் பாடப்பட்ட திருத்தலங்கள் திருமயிலை, திருவொற்றியூர், திருவலிதாயம், திருமுல்லைவாயில், திருவான்மியூர், திருவேற்காடு ஆகும். ஆறுகலங்களும் அடியவர்கள் போற்றி வணங்கிய வணங்குகின்ற சிறப்புடையது. சிவன் கோயில்களின் பொது அமைப்பையே ஆறு கோயில்களும் பெற்றுள்ளன. திருமயிலையில் கபாலீசுவரர், சிறப்புடைய திருத்தலமாக அமைகிறது. மயிலைக் கோயில் சாந்தோம் அருகே அமைந்திருந்தது என்று இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. கபாலீச்சுரம் தல வரலாற்றுச்சிறப்போடு மூர்த்தி, தலம், தீர்த்தம் கொண்டு பல நூல்கள் எழுவதற்குக் காரணமான பழமையான கோயிலாக உள்ளது கோயில் மனிதர் உடம்புபோன்ற அமைப்பில் அமைந்துள்ளது. கோயிலில் ராஜ கோபுரம் உள்ளது இக்கோயில் இறைவன் சிவலிங்க வடிவில் காட்சிதருகிறார். புராணச் சிறப்புகளைக் கொண்டுள்ளது. பூம்பாவை மீண்டும் எலும் புருவன திருத்தலம். மயில்வடிவில் சிவனது அருள் உமையம்மை பெற்ற திருத்தலம்.

## திருவொற்றியூர்

1. திரு என்னும் அடைமொழியைப் பெற்று வரும் ஒற்றியூர் தொன்மை வாய்ந்த திருத்தலமாகும்.

2. முதன்முதலில் பல்லவர் கால பக்தி இலக்கியத்தில் தான் ஒற்றியூர் பற்றிய குறிப்பைக் காண முடிகிறது. குறிப்பாக ஐயடிகள் காடவர்கோன் சிவத்தளி வெண்பாவில் தான் 'ஒற்றியூர்' என்ற பெயர் கூறப்படுகிறது.

3. சைவ சமயத்தின் அறுவகைப் பிரிவுகளுள் ஒன்றாகிய லகுலீச பாசுபத சமயம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவிலேயே இங்குப் பரவியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

4. தொண்டை மண்டலத்தின் இருபத்தி நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய புழற் கோட்டத்தைச் சேர்ந்த ஊர் திருவொற்றியூர்.

5. கல்வெட்டுச் சான்றுகள் வழி திருவொற்றியூர் மிகத் தொன்மை வாய்ந்தது என்ற உண்மையினை அறிய முடிகின்றது. கல்வெட்டுக்களால் இத்தலக் கோயில் இறைவனுடைய பெயர்கள், இங்கு நடைபெற்ற விழாக்கள், இக்கோயிற் சிறப்பு, இக்கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள், இக்கோவிலில் காபாலிகர் செல்வாக்கு மிகுந்திருந்தமை ஆகியவற்றை அறிய முடிகின்றது.

6. பல்லவர், சோழர், பிற்காலப் பாண்டியர் ஆகியோர் ஆட்சியின் கீழும் விஜய நகர ஆட்சியின் கீழும் திருவொற்றியூர் ஆளப்பட்டு வந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சியில் கர்நாடக நவாப்பிடமிருந்து ஆங்கிலேயர்கள் விலைக்கு வாங்கிய கிராமங்களுள் திருவொற்றியூரும் ஒன்று. அக்காலத்தில் நீர் வளம், நில வளம் நிறைந்த திருவொற்றியூர் நெசவுத் தொழிலில் பெரும் புகழ் பெற்று விளங்கியது.

அடியார் பலரால் பாடப் பெற்ற அவர்தம் வாழ்க்கையோடு தொடர்புடைய வரலாற்றுச் சிறப்புடையதாக வணிக வளம் வாய்ந்ததாகத் திருவொற்றியூர் இன்று திகழ்ந்து வருகின்றது.

## திருவான்மியூர் மருந்தீசர்

சோழர்கள் காலத்தே புத்துயிர்பெற்றதிருத்தலம் ஆலயத்தின் கிழக்குவாயில் அழகிய ஏழுநிலைகளைக் கொண்டது பலிபீடம், கொடி, மரம், நந்தி இடம் பெற்றுள்ளது. 108 சிவலிங்கங்கள் தலபுராணம், தீர்த்தங்கள் அமையுத்திருக்கோயிலாக உள்ளது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் இக்கோயிலுக்கு வருகை புரிந்துள்ளார்.

**திருவாலீஸ்வரர் திருவலிதாயம்** எனும் பாடியில் வரலாற்றுச் சிறப்பி பெற்ற கோயிலாக உள்ளது, கொடி மரம், பலிபீடம் போன்ற அமைப்பேடு தலவரலாறும் கொண்ட திருக்கோயிலுக்கும்.

## திருமுல்லைவாயில் (வட)

மாசிலாணீஸ்வரர் அமர்ந்துள்ள இத்தலம் விசய நகர ஆரசால் கட்டப்பட்டது பாலாறு, சுப்பிரமணிய தீர்த்தங்களைப் பெற்றுள்ளது. இத்தலத்திற்குச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்று உள்ளது. இங்குள்ள முருகன்மீது அருணகிரி நாதர் மூன்று திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார்.

## திருவேற்காடு

பாலாம்பிகை சிறப்புடைய திருத்தலமாக உள்ளது. இராஜ கோழமும் கிழக்கு நோக்கிய அமைப்பினைப் பெற்றுள்ளது.

பொது அமைப்பில் மக்களின் வழிபாட்டுத்தலமாக விளங்கும் இத்திருக்கோயில்களில் ஆண்டு முழுமையும் பூசைகளும், வழிபாடுகளும் நடைபெறுவதனை நேரில் காண விழைந்தது.

# சான்றெண்விளக்கம்


1. வேங்கடசாமி செட்டியார், செ., மயிலாப்பூர் கலைக் களஞ்சியம், தொகுதி 8, ப.105.
2. Raman, K.V., The Early History of the Madras Region, p.164.
3. இராகவன், வி.எஸ்.வி., தாலமி, ப.88.
4. Henry Davison Love, Vestiges of Old Madras, Vol.I, p.286.
5. வேங்கடசாமி செட்டியார், செ. (பதிப்பு), நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பா.3518.
6. தேவாரம், ஆறாம் திருமுறை, பா.11.
7. தேவாரம், ஆறாம் திருமுறை, பா.453.
8. தேவாரம், இரண்டாம் திருமுறை, பா.1971.
9. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பா.1069
10. தேவாரம், ஏழாம் திருமுறை, பா.398.
11. அருணாசல தேசிகர், சோ. (பதிப்பு), நந்திக் கலம்பகம், பா.1.
12. மேலது நூல் பா.69.
13. Krishnamacharlu, C.R. (General Editor), South Indian Inscriptions, Archacological Survey of India, Vol.XII, A.R.No.189 of 1912.
14. பதினோராந் திருமுறை, நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி பா.61.
15. ராமன், மு.கோ. (பதிப்பு), திருமயிலை உலா, கண்ணி, 37.
16. மேலது நூல், கண்ணி. 48.

22. ஏகாம்பரநாதன், ஏ., கல்வெட்டில் சமணம், ப.125.

23. Henry Davison Love, Vestiges of Old Madras, Vol.1, p.286.

24. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், திருமயிலைத் தல புராணம், காஞ்சிபுரம் சபாதி முதலியார் உரை, சருக்கங்கள் 6–7.

25. மேலது நூல், நகரச் சருக்கம், பா.2.

26. Dorai Rangaswamy, M.A., Religion and Philosophy of Jevaram, Book 1, p.372.

27. Ibid, pp.372-373.

28. சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, ப.335.

29. தேவாரம், இரண்டாம் திருமுறை, பதிகம் 183, திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982.

30. Dorai Rangaswamy, M.A., Religion and Philosophy of Jevaram, Book 1, p.392.

31. The Kapalishwar Temple at Mylapore, திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982.

32. Raman, K.V., The Early History of the Madras Region, p.196.

33. David M. Lorenzen, The Kapalikas and Kalamubhas Two Host Saivite Sects, p.27.

34. Ramendra Math Mandi Religious Institutions and Bults in the Deccan (A.D.Boo – A.D 1,000), p.86.

35. ராமன், மு.கோ. (பதிப்பு), திருமயிலை உலா, கண்ணி 186.

36. Bensus of India 1961, Volume IX, Part XI – P, Temples of Madras State – 1, Chingleput Distrit and Madras city, p.204.

37. Ramaswami, N.S., 'Mylappore Temple', 'Tamil Civilization, Vol.I, No.3, Quarterly Research Journal of Tamil University, Thanjavur, September, 1983 pp.16-20.

38. அருணாசலம், ப., சைவ சமயம் (ஓர் அறிமுகம்), பக்.62–63.

39. Bensus of India 1961, Volume IX, Part XI – P, Temples of Madras State–1, Chingleput Distrit and Madras City, p.205.

40. Kalyana Sundaram, S., A Short History of Mylapore, p.25.

41. திருமயிலைத் தல புராணம், கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, ப.40.

42. திருமயிலைக் கபாலீச்சரம் கும்பாபிஷேக மலர், 1982. கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு.

43. ராமன், மு.கோ. (பதிப்பு) திருமயிலை உலா கண்ணிகள் 37, 48, 51, 54.

44. மேலது நூல், கண்ணி 94.

45. மேலது நூல், கண்ணி 300.

46. மேலது நூல், கண்ணி 564.

47. துரை அரங்கசாமி, மொ.அ., ‘கபாலீச்சரத்தின் வளர்ச்சி பற்றிய கருத்துகள், சமயக் கலை மலர், திருமயிலைக் கபாலீச்சுரம், சென்னை, 1965. ப.81.

48. திருஞானசம்பந்தர், தேவாரம் 2–183, பா.9.

49. Bensus of India 1961, Volume IX, Part XI – P, Temples of Madras State–1, Chingleput Distrit and Madras City, p.204.

50. ஆய்வாளர் நேரில் கண்ட நாள் 11.5.2015.

51. கபாலீசுவரர் கோயில் குளத்தின் கிழக்குக் கரை கனகப்பிடிச்சுவரின் வடக்கு முனையில் உள்ள கல்வெட்டு.

52. ஆய்வாளர் கண்ட நாள் 11.5.2015.

53. Henry Davison Love, Vestiges of Old Madras, Vol.III, p.531.

54. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், திருமயிலைத் தல புராணம், தீர்த்தம் சருக்கம் பா.24.

55. மேலது நூல், பா.25.

56. மேலது நூல் பா.26.

57. இராசமாணிக்கனார், மா., 'திருமயிலைக் கபாலீச்சரம்' சமயக் கலை மலர், ப.141.

58. திருமயிலை உலா, கண்ணி, 37.

59. ஸ்ரீ அமுர்தலிங்கத் தம்பிரான், திருமயிலைத் தல புராணம், தீர்த்தம் சருக்கம்.

60. திருத்தொண்டர் புராணம், திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம், பூம்பாவை வரலாறு.

61. நாகசாமி, இரா. (பதிப்பு), சென்னை மாநகர்க் கல்வெட்டுக்கள் தொடர் எண். 1967/120.

62. திருமயிலை உலா, கண்ணி 94.

63. திருநாவுக்கரசர், தேவாரம் 6–216–1.

64. திருமயிலை உலா, கண்ணிகள் 117–118, 214–215.

65. Henry Davison Love, Vestiges of Old Madras, Vol.I, pp.321-22.

66. Kalyana Sundaram, S., A Short History of Mylapore, p.4.

67. ராமன், மு.கோ. (பதிப்பு), திருமயிலை உலா, கண்ணிகள் 116–120.

68. மேலது கண்ணி 121.

69. மேலது கண்ணி 118.

70. வேங்கடசாமி, மயிலை சீனி, 'மயிலாப்பூர் வரலாறு', ப.8.

71. Kalyana Sundaram, S., A Short History of Mylapore, p.8.

72. சுந்தரர் தேவாரம், ஏழாந் திருமுறை, பதிகம் 91–1.

73. சுப்பிரமணிய பிள்ளை, இ.மு., சென்னை மாவட்டக் கோவில் வரலாறு, ப.47.

74. பெரியபுராணம், ஏழாம் பகுதி, கலிய நாயனார் புராணம், ப.4022.

75. சம்பந்தம், தலைநகர் சென்னை, ப.16.

76. நாவுக்கரசர் தேவாரம், ஐந்தாம் திருமுறை, பதிகம் 24–20.

77. திருவொற்றியூர்ப் புராணம், இலிங்கோற்பத்திச் சருக்கம் பா.34.

78. Tamil Lexicon, University of Madras, pp.610.

79.. திருவொற்றியூர்ப் புராணம், அவையடக்கம் பா.14.

80. மேலது, வாசுகிச் சருக்கம் பா.35.

81. MER 105 of 1892, 160, 168, 169, 180 of 1912.

82. தொல்காப்பியம் : மரபியல் : சூ.75.

83. பதினோராந் திருமுறை, பட்டினத்தார், திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது பா.2; வரி.16.

84. பெரியபுராணம், திருநாவுக்கரசர் புராணம் பா.1598.

85. பெரியபுராணம், ஏயர்கோன் கலிக்காமர் புராணம் பா.3356.

86. திருவருட்பா, மூன்றாந் திருமுறை, இரண்டாம் பகுதி, திருவொற்றியூர் தனி வெண்பா, ப.214.

87. கந்தசாமி கவிராஜன், க.தி., திருவொற்றியூர் வெண்பா, பா.1.

88. திருவொற்றியூர்ப் புராணம்; இலிங்கோற்பத்திச் சருக்கம்; பா.37.

89. ARE 109 of 1912, 131 of 1912, 220 of 1912.

90. ARE 19, 3-14 to 103.

91. தமிழில் தல புராணம், ப.31.

92. மேற்படி பா.9–10.

93. கலைக்களஞ்சியம், தொகுதி–6, ப.54.

94. மேலது ப.57

95. திருவொற்றியூர்ப் புராணம் : ப.8

96. மேற்படி, ப.10.

97. மேற்படி, ப.20.

98. மேற்படி, ப.56.

99. துரைசாமி பிள்ளை, ஔவை சு., திருவருட்பா மூலமும் உரையும், இரண்டாம் திருமுறை, முதல் தொகுதி, கொடை மடப் புகழ்ச்சி, ப.1.

100. மருந்தீஸ்வரர் எனும் நல் மருத்துவர், ப.19.

101. மேலது நூல், ப.19.

102. மேலது நூல், பக்.21, 22.

103. மேலது நூல், ப.23.

104. மேலது நூல் ப.24.

105. மேலது நூல் ப.25.

106. மேலது நூல் ப.27.

107. மேலது நூல் ப.52.

108. மேலது நூல் ப.56.

109. மேலது நூல் ப.57.

110. மேலது நூல் ப.63.

111. மேலது நூல் ப.65.

112 மேலது நூல் ப.66.

113. மேலது நூல் ப.73.

114. மேலது நூல் ப.79.

115. மேலது நூல் ப.81.

116. மேலது நூல் ப.86.

117. மேலது நூல் ப.87.

118. மேலது நூல் ப.90.

119. மேலது நூல் ப.95.

120. மேலது நூல் ப.101.

121. மேலது நூல், ப.104.

122. மேலது நூல், ப.105.

123. மேலது நூல், ப.106.

124. மேலது நூல், ப.107.

125. மேலது நூல், ப.108.

126. மேலது நூல், ப.109.

127. திவாகரம், ப.17.

128. திருவலிதாயம், திருக்கோயில் வரலாறு, ப.2.

129. மேலது நூல், ப.90.

130. தொண்டை மண்டலச் சதகம், ப.16

131. தொண்டை நாட்டுத் தேவாரத் தலங்கள், ப.18.

132. திருவல்லீசுவரர் திருக்கோவில் தல வரலாறு, முன்னுரை.

133. மேலது நூல், பதிப்புரை, ப.2.

134. மேலது நூல், பதிப்புரை, ப.3.

135. 276 திருத்தலங்கள், ப.242.

136. திருவல்லீசுவரர் திருக்கோவில் தலவரலாறு, ப.114.

137. ந. சு. நடராசன், தொண்டை நாட்டுத் திருத்தலங்கள், ப.126.

138. மேலது நூல், ப.127.

139. சிவசுந்தரம், வட திருமுல்லை வாயில் தரிசனம், ப.1.

140. மேலது நூல், ப.2.

141. மேலது நூல், ப.3.

142. மு. நக்கீரன், சென்னைக் கோவில்கள், ப.138.

143. மேலது நூல், ப.139.

144. மேலது நூல், ப.140.

145. மேலது நூல், ப.140.

146. மேலது நூல், ப.141.

147. மேலது நூல், ப.142.

148. தொண்டை நாட்டுத் தேவாரத் தலங்கள், ப.134.

149. வட திருமுல்லை வாயில் தரிசனம், ப.20.

150. மேலது நூல், ப.21.

151. திருவேற்காடு வரலாறு, ப.8.

152. மேலது நூல், ப.12.

153. மேலது நூல், ப.13.

154. திருஞானசம்பந்தர், திருப்பதிகம், 17:1.

155. திருவேற்காடு வரலாறு, ப.18.

156. மேலது நூல், ப.21.